REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஓகஸ்ட் 31 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
92 ANNIVERSARY
தினகரன்
வரு. 92 இல. 208 | Saturday 31, August, 2024 | 14 பக்கங்கள் | 50/-




யாழ்ப்பாணம், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தேர் திருவிழாவை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை 'தினகரன் வாரமஞ்சரி' பத்திரிகையின் அனுசரணையுடன் விசேட மலர் வெளிவருகின்றது.

# IMF ஒப்பந்தங்களை மீறினால் நாடு பெரும் ஆபத்தில் சிக்கும்

## "2025ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வரிகள் குறையும்" –இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க





## "செய்ய முடியாதென கூறிய அனைத்தும் ஜனாதிபதி உள்ளிட்ட குழு 'இயலும்' என செயலில் நிரூபித்தது" –அமைச்சர் அலி சப்ரி

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை மறுசீரமைத்தால் அத்தருணமே நாடு ஆபத்தில் சிக்க நேரிடுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் பிணைமுறி பத்திரதாரர்களுடன் செய்துகொண்ட இணக்கப்பாடுகளை இழந்து நாடு மீண்டும் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்குள் செல்லும் அபாயம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார். உழைக்கும் போது செலுத்தப்படும் வரியை திருத்தியமைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அது தொடர்பான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்ட பின்னர் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் வரி குறைக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்த போது,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனமான 'ஐந்தாண்டு திட்டம் இயலும் ஸ்ரீலங்கா' வெளியிடப்பட்டது. பொருளாதார நெருக்கடியால் அதல பாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை மீட்டு, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய நாடாக மாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. வேறு யாரும் சவாலை ஏற்க விரும்பவில்லை. மேலும் அந்த சவாலை ஏற்கும் திறன் அவர்களிடம் இருக்கவும் இல்லை.

நாம் கட்டியெழுப்பிய பொருளாதார ஸ்திரத்தன்மையை முன்னோக்கி கொண்டு செல்வதை 'ஐந்தாண்டு திட்டம் இயலும் ஸ்ரீலங்கா' தேர்தல் விஞ்ஞாபனம் அடிப்படையாக

06

# ஜனாதிபதியுடன் அஜித் தோவல் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (30) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. இதன்போது ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

# ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர் குழு ஒன்பது மாகாணங்களிலும் பணியில்



ஜனாதிபதி தேர்தலுக்கான ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு ஒன்பது மாகாணங்களிலும் தனது கடமைகளை முன்னெடுத்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவின் தலைமை கண்காணிப்பாளரும் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினருமான *Nacho Sanchez Amor* தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இச்செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 26 கண்காணிப்பாளர்களை கொண்ட ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு ஒன்பது மாகாணங்களிலும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளது. தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் இவர்கள், ஒவ்வொரு மாகாணத்துக்கும் சென்று தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை நேரில் அவதானிப்பதுடன், அது குறித்த விடயங்களையும் கேட்டறிகிறார்கள். அத்துடன் தேர்தலின் சிக்கலான செயல்முறையின் முழுமையான விபரங்களை பெற முயற்சிக்கிறார்கள்

06

# ஜனாதிபதி தேர்தலில் இம்முறை மூன்றுக்கும் அதிக வேட்பாளர்கள்

## விருப்பு வாக்குகளும் அளிக்கலாம்



ஜனாதிபதி தேர்தலுக்கு வாக்களிக்கும் ஒழுங்கு முறையை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மூன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையால் ஒரு வேட்பாளருக்கு வாக்கையும், ஏனைய இரண்டு வேட்பாளர்களுக்கு இரண்டாவது விருப்பு தெரிவு மற்றும் மூன்றாவது விருப்பு தெரிவை வாக்குச்சீட்டில் அடையாளம் இடுவதற்கான சாத்தியப்பாடு காணப்படுகிறது. அவசியமெனில் ஒரு வாக்கை மாத்திரம் அடையாளம் இடுவதற்கும் சாத்தியம் காணப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் வருகை

# கொழும்பு பாதுகாப்பு கூட்டு குழுமத்தின் ஸ்தாபக ஆவணங்கள் நேற்று கைச்சாத்து



கொழும்பு பாதுகாப்பு கூட்டுக் குழுமத்தின் (*Colombo Security Conclave*) ஸ்தாபக ஆவணங்களில் கைச்சாத்திடுவதற்காக இந்திய பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். மொரீஷியஸில் 2023 டிசம்பரில் நடைபெற்ற

06

# அமரர் தொண்டமானின் 111ஆவது ஜனன தினம்

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 111ஆவது ஜனன தினத்தையிட்டு நேற்று (30) கொழும்பு ஜனாதிபதி செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது உருவச்சிலைக்கு இ.தொ.கா. பிரதிநிதிகள் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.





## அரச வைத்தியசாலை கட்டமைப்புக்குள்

# தரமற்ற மருந்துகளென எதுவும் இல்லை; நோயாளர் அச்சமின்றி பயன்படுத்தலாம்



அரசாங்க வைத்தியசாலைகள் கட்டமைப்பில் தரமற்ற மருந்துகள் எதுவுமில்லையென சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தில் எந்த வகையிலும் இடமில்லையெனவும், அரசாங்க வைத்தியசாலைகளினால் வழங்கப்படும் மருந்துகளை நோயாளிகள் அச்சமின்றி பாதுகாப்பாக பயன்படுத்த முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று

06

## இண்டிகோ விமான சேவை

# யாழ்.–சென்னை இடையே நாளை முதல் ஆரம்பம்



சென்னைக்கும் யாழ். பலாலிக்குமிடையேயான இண்டிகோ (*Indigo*) ஏயார்லைன்ஸ் நிறுவனத்தின் புதிய விமான சேவை

06

## வறுமையை ஒழிக்கும் மக்கள் மயமான

# தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் வெளியிட்டுள்ளோம்



"குறுகிய காலத்துக்குள் உருவெடுத்த மிகப்பெரிய அரசியல் சக்தியால் வறுமையை ஒழிக்கும் மக்கள் மயமான தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் வெளியிட்டிருக்கிறோம்" என எதிர்க்கட்சி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 25ஆவது மக்கள் வெற்றி பேரணியானது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பூகொட நகரில்

06

# ஜனாதிபதி தேர்தல் கடமை; 54,000 பொலிஸார் களத்தில்



ஜனாதிபதி தேர்தலில் 54,000 பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை

06

## குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டவுடன்

# வைத்தியர் பரிந்துரையின்றி மருந்துகளை வழங்காதீர்கள்

குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டவுடன் வைத்தியர் பரிந்துரையின்றி மருந்துகளை வழங்கக்கூடாதென தேசிய நச்சு தகவல் மையத் தலைவர் வைத்தியர் ரவி ஜயவர்த்தன அறிவுறுத்தியுள்ளார்.

குழந்தைகளுக்கு பரசிட்டமோல் அதிகளவு கொடுப்பதன் காரணமாக குழந்தைகளின் கல்லீரலுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியரின் பரிந்துரைகளில் பரசிட்டமோல் இருந்தால் மட்டுமே மருந்தை கொடுக்க வேண்டும். எனினும் குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்படும் போது அதிகளவு பரசிட்டமோல் கொடுக்கப்படுவதால் குழந்தைகளின்

06

## துறைமுக நகர வேலைவாய்ப்புகள்

# கிராம இளைஞர்களுக்கு வழங்கும் திட்டம் விரைவில் உருவாக்கப்படும்



கொழும்பு துறைமுக நகரை பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றியமைக்கவுள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இங்கிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

06

## அன்று ஓடி ஒளிந்தவர்கள் பலர்

# இன்று நாட்டை பொறுப்பேற்க 38 பேர் தேர்தலில் போட்டி

## அந்த நிலையை உருவாக்கியவர் ஜனாதிபதி ரணில்



அன்று ஆட்சியை ஏற்க ஒருவரேனும் முன்வரவில்லை. ஆனால் இன்று நாட்டை பொறுப்பேற்க 38 பேர் முன்வந்துள்ளனர். அந்த நிலைக்கு நாட்டை கொண்டு வந்திருப்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியென பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ராஜித சேனாரத்ன

06

# தனி நபரொருவரின் சுயநலத்துக்காக இரண்டாக பிளவுபடும் தமிழரசு கட்சி



தமிழரசுக் கட்சி பிளவுபடுவதற்கு தனிப்பட்ட நபர் ஒருவரே காரணமென தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் ஒரே நிலைப்பாட்டில் உள்ள தமிழ்க்

06

# கஷ்டப்பட்டு கட்டியெழுப்பிய நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்க வேண்டும்

## ஹம்பாந்தோட்டை மக்கள் பேரணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு




**ஹம்பாந்தோட்டையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம், ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



கஷ்டப்பட்டு கட்டியெழுப்பிய நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாத்து, அதனை முறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மக்களின் வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் சலுகைகளை வழங்கி வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, தமக்கும் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஹம்பாந்தோட்டை பேருந்து நிலையத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றி பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"ஹம்பாந்தோட்டைக்கு இதற்கு முன்னர் வந்த போது எனது மேடையில் இப்போதிருக்கும் அமைச்சர்கள் இருக்கவில்லை. 2022ஆம் ஆண்டில் நான் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன். அனுர, சஜித்திடம் உதவி கேட்டேன். நாம் ஏற்படுத்திய நிலைத் தன்மையை பாதுகாக்கவே மீண்டும் போட்டியிடுகிறேன்.

அன்று நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி முற்றாக சரிந்து கிடந்தது. அன்று விவசாயிகளுக்கு உரம் தேவைப்பட்டது. அதனை பெற்றுக்கொடுக்க வழி செய்தேன். சுற்றுலாவை பலப்படுத்தினோம்.

அதற்கு உதவிகளை வழங்கிய விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

அதனால் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் 'அஸ்வெசும', 'உருமய' திட்டங்களையும் செயற்படுத்தி, குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குகிறோம். அரச ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரித்தோம். அதற்கான நிதியை விவசாயிகளே தேடித் தந்தனர்.

நாட்டில் நிதி இருந்தால் மட்டுமே சலுகை வழங்க முடியும். எண் கணிதம் அறியாதவர்கள் இன்று ஜனாதிபதியாக முயற்சிக்கின்றனர். நாம் மக்களின் வாழ்க்கை செலவை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம். நான்கு வருடங்கள் இளையோருக்கு தொழில் கிடைக்கவில்லை. 50 ஆயிரம் பேருக்கு விருப்பமான தொழில் கல்வி பயிலவும் நிதி நிவாரணம் வழங்குவோம்" என்று தெரிவித்தார்.





# பாதுகாப்பு தேவைகளுக்கு தேவையற்ற நிலங்கள் உரிமையாளர்களுக்கு திருப்பி வழங்கப்படும்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐ.ம.கூ.யின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

பாதுகாப்பு தேவைகளுக்கு தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்கு திருப்பி அளிக்கப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மதத் தலைவர்கள், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து முறையாக கருத்துகளை பெற்று, தற்போதைய அரசியலமைப்பை மாற்றி புதிய அரசியலமைப்பை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி / ஐக்கிய மக்கள் கூட்டணி அர்ப்பணிப்புடன் உள்ளது.

இந்த செயல்முறையில் எமது கொள்கை என்னவென்றால் தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப்பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றுவதாகும்.

முடிவெடுக்கும் செயல்முறையில் குடிமக்களை செயலில் ஈடுபடுத்த, கிராம அரசு மற்றும் நகர அரசு எனப்படும் சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்கள் உருவாக்கப்படும். புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும்வரை 13ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

அரசியலமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியினால் ஒரு தலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பதுடன், மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம். 6 மாதங்களுக்குள் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படும்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை வலுப்படுத்தப்பட்டு, அவற்றின் நோக்கங்களை திறம்பட செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற வசதிகளை வழங்குவோம்

பாதுகாப்பு தேவைகளுக்கு தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்கு திருப்பி அளிக்கப்படும். சட்டவிரோதமாக காலம் தாழ்த்தப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்களை விரைவாக நடத்த தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் நாளாந்தம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

நீதித்துறை நிர்வாகத்தில் நிறைவேற்று அதிகாரத்தின் தலையீட்டை தடுக்க சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன், நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் செயல்திறனை நிறுவ தேவையான சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் .

தோட்டத் தொழிலாளர்களை காணிக்கு சொந்தமான சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான அரசாங்க கொள்கையை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துவதோடு, தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வதற்கு முறையான சம்பளம் உறுதிப்படுத்தப்படும் .

வரிசையின்றி விரைவாக கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்க, ஒவ்வொரு செயலகத்திலிருந்தும் பெற முடியும் என்பதை உறுதி செய்ய அனைத்து பிரதேச செயலக அலுவலகங்களும் இலங்கை அரசாங்க வலையமைப்புடன் இணைக்கப்படும்.



தொழில் வல்லுநர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பும் நியாயமற்ற வரிக்கட்டமைப்பை மாற்றியமைப்போம்.

அரச காணிகளில் வசிக்கும் காணி அனுமதி பெற்றவர்களுக்கு 5 ஆண்டுகளுக்குள் உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை முழுவதும் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இலவச பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்கப்படும்" என்று அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனம்

# மலையக பெருந்தோட்ட மக்களின் 200 வருட கனவுகளை நனவாக்கும்

**பொகவந்தலாவ நிருபர்**

நாட்டையும் மக்களையும் பாதுகாத்து அடுத்த 5 ஆண்டுகளில் எவ்வாறு நாட்டை அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்லப் போகிறார் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெட்டத் தெளிவாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருக்கிறார்.

எனவே மலையக பெருந்தோட்டத்துறை மக்கள் உட்பட அனைத்தின மக்களும் ஜனாதிபதியுடன் கைகோர்த்து செல்ல வேண்டுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பான ஒன்றிணைந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (29) கொழும்பில் நடைபெற்றது. ஊடகவியலாளர் சந்திப்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தோட்ட லயன் வீடுகளுக்கு பதிலாக அனைத்து வசதிகளையும் கொண்ட தனி வீட்டுத்திட்ட கிராமத்தை அமுல்படுத்தும் நடவடிக்கை வரவேற்கக் கூடியது" எனத் தெரிவித்தனர்.

அதில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற மைதானம் ஏனைய தோட்டக் காணிகள், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கி தனி வீட்டுக் கிராமம் என்பன தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளதாக தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம், முழு நாட்டுக்கும் ஏற்றவாறும் முழு நாட்டையும் துரிதகதியில் அபிவிருத்தி செய்யும் நோக்கிலும் இருப்பதோடு மலையக பெருந்தோட்ட மக்களை பொறுத்தவரையில் 200 வருடகால கனவை நனவாக்கும் விடயம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மலையக மக்களின் வாழ்க்கை முறைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு கொள்கை பிரகடனமாக இது அமைந்துள்ளதாகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் அருணாச்சலம் மேலும் தெரிவித்தார். கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் 5 வருடங்களில் இந்த நாட்டை எவ்வாறு கொண்டு செல்ல போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கொள்கை பிரகடனத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

5 ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் இதில் குறிப்பிட்டுள்ளார். மற்றையவர்கள் முன்வைப்பது வெறுமனே கொள்கைகள் மட்டுமே. அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது பற்றியும் அதற்கான வேலைத்திட்டம் என்னவென குறிப்பிடப்படவில்லை.

நாடும் நாமும் முன்னோக்கி செல்ல வேண்டுமானால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து செல்லவேண்டுமென கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் குறிப்பிட்டார்.

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 31 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්


**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.47
ளுஹர் - 12.13
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஆவணி 15

ராகுகாலம் : காலை : 9.05 - 10.35வரை
சுபநேரம் : மாலை : 03.05 - 04.35வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



சஜித்தின் பாடசாலைகள் நவீன வகுப்பறை உருவாக்கல் திட்டம்

## 10,000 கோடீஸ்வரர்களிடம் உதவி பெறுவதாக கூறுவது வேடிக்கை

'இயலும் ஸ்ரீலங்கா' ஜா - எல மக்கள் பேரணியில் ஜனாதிபதி தெரிவிப்பு



ஜா எலவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்





செப்டெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று 22ஆம் திகதி நாட்டுக்கான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று ஜா - எல நகரில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

ஏனைய பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரிடம் எத்தகைய வேலைத்திட்டமும் கிடையாதென குறிப்பிட்ட ஜனாதிபதி, சஜித் பிரேமதாச நாட்டில் பத்தாயிரம் பாடசாலை நவீன வகுப்பறைகளை உருவாக்க சர்வதேச நாடுகளிலிருந்து 10,000 கோடீஸ்வரர்களிடம் உதவி பெறுவதாக கூறுவது வேடிக்கையானதென்றும் அவ்வாறு இவர் அழைத்தவுடன் அவர்கள் வருவதற்கு காத்துக்கொண்டா இருக்கின்றனர் என்றும் கேள்வி எழுப்பினார்.

06

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்

## தேர்தல் விஞ்ஞாபனம் 2ஆம் திகதி வெளியீடு

சவால்களை முறியடித்து எதிர்கால சந்ததியினரின் நாளைய சகல அம்சங்களிலும் அபிவிருத்தி செய்யும் தொலைநோக்கு பார்வையை உள்ளடக்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 2ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இதன்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷவினால் நாட்டிற்கு முன் வைக்கப்பட்ட விஞ்ஞாபனத்தின் அசல் வடிவம் நேற்று (30) பிற்பகல் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

06

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி

## வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் மட்டுமே

அமைச்சர் கஞ்சன விஜேசேகர



பொருளாதாரத்தை சரியாக மேம்படுத்தி வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் மட்டுமே என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு, பிளவர் வீதியில் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இச் சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

"இரண்டு வருடங்களில் இலங்கையை பொருளாதார ரீதியில் பலப்படுத்திய வேலைத்திட்டத்தின் நீட்சியாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட கொள்கை அறிக்கையை நாம் பார்க்கின்றோம். பொருளாதார நெருக்கடியால் தொழில்துறை சரிந்தது. இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐந்தாண்டு கொள்கை பிரகடனத்தில் அந்த தொழில்துறையை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை கல்வி முடித்து வெளியேறும் பிள்ளைகளுக்கு அரச துறை மற்றும் தனியார் துறையை இணைத்து தொழிற் பயிற்சிகளை நடத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக ஒரு பிள்ளைக்கு மாதாந்தம் முப்பத்தையாயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது" என்றார்.

## சஜித்துடன் சஹ்மி ஷஹீத் சந்திப்பு



சமாதானத்தின் தூதை ஏந்தி நடைபவனியாக நாட்டை சுற்றி வந்த சஹ்மி ஷஹீத், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து கலந்துரையாடினார்.

சமாதானத்தின் தூதை ஏந்தி சுமார் 1,500 கிலோமீற்றர் தூரம் நடைபவனியாக நாட்டை சுற்றி வந்த பேருவளை சஹ்மி ஷஹீத் எனும் இந்த இளைஞர், தனது பயணத்தை முடித்துக்கொண்ட பின்னர் நேற்று (30) எதிர்க்கட்சிதலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

## அஜித் தோவலை சந்தித்த மலையக தலைமைகள்



இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை மலையக அரசியல் தலைமைகள் சந்தித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை மரியாதை நிமித்தம் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், தொழில் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான வடிவேல் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இரு தரப்பினருக்குமான சந்திப்பின் போது இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான உறவை வலுப்படுத்துதல் மற்றும் சமூக பொருளாதார விடயங்களை மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

## தினகரன் 92 வருடங்களுக்கு முன்

## தினகரன்

இன்று 31 ஓகஸ்ட் 1932



கல்வி முறை சரியன்று

சீர்திருத்தம் தேவை

டாக்டர் எஸ். சி. பாலின் கண்டன முழக்கம்

ஓர் வேண்டுகோள்

யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழா

டாக்டர் பால்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் உள்ள "யாழ்ப்பாணக் கல்லூரி"ப் பரிசளிப்பு விழாவின்போது, விஜயஞ்செய்திருந்த டாக்டர். எஸ். சீ. பால், இலங்கையின் பெருந்தொகையான பணம் கல்வியிலேயே செலவாகின்றது என்ற கருத்தைத்தெரிவித்தார்.

திரு. கே. பாலசிங்கம்

### கல்வி முறை சரியன்று

### சீர்திருத்தம் தேவை

டாக்டர் எஸ்.சி. பாலின் கண்டன முழக்கம்

### ஓர் வேண்டுகோள்

யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் உள்ள "யாழ்ப்பாணக் கல்லூரி" பரிசளிப்பு விழாவின் போது விஜயம் செய்த டாக்டர். எஸ். சீ. பால், இலங்கையின் பெருந்தொகையான பணம் கல்வியிலேயே செலவாகின்றது என்ற கருத்தை தெரிவித்தார்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

காரைக்கவியின்

## 'சீத்துவக்கேடு' நூல் வெளியீட்டு விழா



காரைக்கவியின் "சீத்துவக்கேடு", 'துலைஞ்சு போன எங்கட வாழ்க்கை' எனும் நூல் வெளியீட்டு விழா செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி மாலை 4.31 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். வாழ்த்துரையை பேராசிரியர் தை.தனராஜும், முகப்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும், நயவுரையை வைத்தியர் செல்வரஞ்சனி சுப்ரமணியமும், ஆய்வுரையை பேராசிரியர் வ.சிவலோகதாசனும், நோக்குரையை கலாநிதி க.ரகுபரனும், மகிழுரையை சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும், ஏற்று நன்றியுரையை நூலாசிரியரும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், சாகித்திய ரத்தினா தி.ஞானசேகரன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இ.சிவராஜா, புற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் ந.ஜெயகுமாரன், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மேனாள் ஆசிரியர் க.குகப்பிரியன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

## ஜனாதிபதி போன்ற துணிச்சல் மிக்க தலைமைத்துவமே நாட்டுக்கு தேவை

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற துணிச்சலான தலைமைத்துவமே நாட்டுக்கு தேவையென பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றி பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

06

## அநுரகுமார திஸாநாயக்கவை உடன் கைது செய்ய கோரிக்கை

CID இல் சிவில் அமைப்பொன்று முறைப்பாடு

தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர், ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவை உடனடியாக கைது செய்யுமாறு கோரி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சிவில் அமைப்பொன்று முறைப்பாடு செய்துள்ளது.

06

பாராளுமன்றை தீயிட்டு கொளுத்த விடாமல்

## ஜனநாயகத்தை பாதுகாத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா



பாராளுமன்றத்தை தீயிட்டு கொளுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடமளிக்காது ஜனநாயகத்தை பாதுகாத்தமையாலேயே நாடு இன்று நல்ல நிலைமைக்கு வந்துள்ளது.

இல்லையேல் பங்களாதேஷை விட கீழ் மட்டத்துக்கு நாடு வீழ்ச்சி அடைந்திருக்குமென பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த 102 பேர் அங்கிருந்து வெளியேறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர். 35 க்கும் மேற்பட்ட கட்சிகள், அமைப்புகள் அவருக்கு ஆதரவாக வந்துள்ளன. 112 க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

2019 இல் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதிக வாக்குகளை பெற்று அவரை ஜனாதிபதியாக்கி மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்கினோம். பசில் ராஜபக்ஷவை நிதி அமைச்சராகவும் நாமல், சமல் ஆகியோரை அமைச்சரவை அமைச்சர்களாகவும், சஷீந்திர ராஜபக்ஷவை இராஜாங்க அமைச்சராகவும் ஆக்குவதன் மூலம் ஒட்டுமொத்த குடும்பமும் ஆட்சியை பிடித்தது.

2015 இல் தோல்வியடைந்தவர்களை மக்கள் மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வந்தார்கள். உரங்களை கொண்டு வரும் போது பாராளுமன்றத்தில் 156 பேர் கையெழுத்திட்டு இதை செய்ய வேண்டாம் என்று கூறினர்.

06


**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**தேசிய போட்டி ரீதியான விலைமனு**

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | எதிர்பாராச் செலவு தவிர்த்து பொறியியலாளரின் மதிப்பீடு (ரூபா மில்.) | விலைமனு பிணை (ரூபா மில்.) | காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|
| RDA/ SP/1000KM/ WP/003 | கொழும்பு மாவட்டத்தில் வாகனங்கள் செல்லக்கூடிய மற்றும் பாதுகாப்பான நிலைமைக்கு வீதிகளை மேம்படுத்தல் (பொதி 03) | 182 | 2.5 | 60 |

தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறையின் கீழ் மேலுள்ள பணிக்காக விலைமனு இத்தால் கோரப்படுகிறது. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் 2024 செப்டெம்பர் 19 ஆம் திகதி வரை www.rda.gov.lk என்ற வீ.அ.அ. மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதள பக்கங்களை பார்ப்பதற்கு கோரப்படுகின்றனர்.

தலைவர்,
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, பெறுகைப் பிரிவு, 7ஆவது மாடி, "மகநெகும மஹமெதுர", 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்ல.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று

பிறன் மனைவியை விரும்பிச் செயல்படுவது அறவழியில் நடக்காதவர் செயலைவிடத் தீமையானதாகும்.

# தேர்தல் பிரசாரக் களங்களில் நிறைவேறாத வாக்குறுதிகள்!

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தேர்தலை இலக்கு வைத்து நாடெங்கும் பிரசாரக் கூட்டங்களும் தீவிரமடைந்துள்ளன. வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தென்னிலங்கை உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தனது அரசாங்கம் கடந்த இரு வருடங்களில் பொருளாதார மீட்சியில் நிகழ்த்திய சாதனைகளை பட்டியலிட்டுக் கூறி வருகின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் மத்தியில் தெரிவிக்கின்ற தகவல்கள் ஆதாரபூர்வமானவையாக உள்ளன.

நாட்டின் பொருளாதார மீட்சிக்காக கடந்த இரு வருட காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் மற்றும் உடன்படிக்கைகள் குறித்து அவர் தெளிவான தகவல்களைக் கூறி வருகின்றார். அதேசமயம் கடந்த இருவருட காலத்தில் தாம் மேற்கொண்ட பிரயத்தனங்களினால் உண்டான பலாபலன்களையும் புள்ளிவிபரங்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துக் கூறி வருகின்றார்.

ஒரேயொரு ஆசனத்தின் மூலம் பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த அவர், அதல பாதாளத்துக்குள் வீழ்ந்த இலங்கைத் தேசத்தை இன்றைய நிலைமைக்கு மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகளை மக்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்புகளை பெரும் சாதனைகளென்றே கூற வேண்டும். முன்னைய ஆட்சித்தலைவர் பதவியைத் துறந்ததையடுத்து பொருளாதார வீழ்ச்சியும் கொந்தளிப்பும் நிறைந்திருந்த நாட்டை இன்றைய நிலைமைக்குக் கொண்டு வந்ததென்பது சாதாரணமான விடயமல்ல.

உலகமே இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை உற்றுநோக்குகின்றது. இந்த சாதனை எவ்வாறு நிகழ்த்தப்பட்டதென்பதையிட்டு சர்வதேசம் வியப்படைந்துள்ளது. ஏனெனில் உலகில் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த பல நாடுகள் உள்ளன. அந்நாடுகள் இன்னுமே பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழவில்லை. ஐந்தாறு வருடங்கள் கடந்த பின்னரும் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழாத நாடுகள் உலகில் இன்னும் உள்ளன. எனவேதான் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி குறித்து உலகம் வியப்புடன் உற்றுநோக்குகின்றது.

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவதென்பது இலகுவான காரியமல்ல. அக்காரியத்தில் உள்ள சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிந்து ஏற்றார். நாட்டை மீண்டும் ஒருபோதும் அமைதியானதும், துன்பமின்றி வாழக்கூடியதுமான தேசமாகக் கட்டியெழுப்ப முடியுமென எவரும் எண்ணிப் பார்க்காத காலமாக அன்றைய காலம் இருந்தது.

அன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பொருளாதார வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பயனளிக்கத் தொடங்கின. அதன் பிரதிபலன்கள் மக்களைச் சென்றடைவதற்கான வேலைத் திட்டங்களையும் அவர் முன்னெடுத்தார். அதன் பயனாக எரிபொருள் வரிசைகளில் சிக்குண்டு கஷ்டப்பட்ட மக்களை மிகவும் குறுகிய காலத்திற்குள் புன்னகையுடன் இருக்கும் நிலைமைக்கு ஜனாதிபதியினால் மாற்ற முடிந்தது.

அன்றைய நெருக்கடியான காலகட்டத்தை மக்கள் இன்றும் அடிக்கடி நினைத்துப் பார்க்கின்றனர். எரிபொருள் விநியோக நிலையங்களில் இரவுபகலாக வீதியோரங்களில் படுத்துக் கிடந்த மக்கள் இலட்சக்கணக்கானோர் அன்றைய காலகட்டத்தையும் இன்றைய காலகட்டத்தையும் அடிக்கடி நினைத்துப் பார்க்கின்றனர்.

வீடுகளில் அடுப்பு எரிப்பதற்கு மண்ணெண்ணெய் இருக்கவில்லை. சமையல் எரிவாயுவைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெயாவது கிடைக்காதா என ஏங்கியவாறு எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக ஆண்களும் பெண்களும் விடியவிடிய காத்துக் கிடந்தனர்.அன்றை காலம் மிகவும் துன்பகரமானது. மூன்று வேளை உணவு உண்பதற்கும் இயலாத நிலையில் ஏராளமான குடும்பங்கள் பட்டினியால் அவதியுற்றன.

இவ்வாறான கொடிய காலகட்டத்தை நீக்கியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவர் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னரே நாடும் மக்களும் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. பொருளாதாரம் மீட்சி பெற்று மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்திருக்கிறது.

இந்தச் சூழலில் எமது இலங்கைத் தேசம் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டிருக்கிறது. நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி சுயேச்சை அபேட்சகராக இத்தேர்தலில் களமிறங்கியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மறுபுறத்தில் எதிரணிகள் தேர்தலில் இறங்கியிருக்கின்றன. எதிரணியினர் மக்களிடம் முன்வைக்கின்ற வாக்குறுதிகள் வியப்பைத் தருகின்றன. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு இன்னும் முழுமையாக மீண்டெழாத நிலையில், இவ்வாறான சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்குவது முறையல்ல என்பதுதான் மக்களின் அபிப்பிராயம் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க வேண்டியது நாட்டு மக்களின் தவிர்க்க முடியாத கடமை

அதலபாதாளத்தில் தள்ளப்பட்டுக் கிடந்த நாடு, சற்று உத்வேகம் கொண்டு செயற்படத் தொடங்கியுள்ள காலகட்டத்தில் மிக அவசியமான ஒரு தேர்தலைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது.

எவராலும் இந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவது இலேசான காரியமல்ல என இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் விழி பிதுங்கியிருந்தவேளை, தனி ஒருவராகத் தன்னால் முடியும் என தயங்காது தலைமைப் பொறுப்பை பாரம் ஏற்று நாட்டை தூக்கி நிறுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இவ்வாறு சிறிலங்கா சமத்துவ முன்னணியின் செயலாளர் இப்ரான்சா பவ்மி தெரிவித்துள்ளார்.

இது குறித்த அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தனக்கான கட்சிப்பலம் இல்லாத போதும் நடப்பில் இருந்த அரசின் ஆதரவோடு, சிதறுண்டு போய்க் கிடந்த ஜனநாயக ஆட்சியை கட்டி எழுப்பியது மட்டுமின்றி, தவித்துப் போய் நின்ற மக்களுக்கு நம்பிக்கையும் ஊட்டியவர் இவர்.

இத்தகைய நிலையில் 8 ஆவது ஜனாதிபதிக்குரிய பதவிக்காலம் முடிவடைந்த நேரத்தில் 9 ஆவது ஜனாதிபதியைத் தேர்வு செய்ய வேண்டிய ஜனநாயகக் கடமை மக்களாகிய எம்மிடம் வந்தடைந்துள்ளது.

இத்தருணத்தில் இத்தேர்தல் களத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 39 பேர் போட்டியிட குதித்துள்ளனர். இந்த 39 பேரில் யாரைத் தெரிவு செய்வது என்ற தடுமாற்றம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பெரும் குழப்பமாகும்.

இவர்களில் ரணில் விக்கிரமசிங்கவை ஏன் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற கேள்வி குறித்து ஆராய வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் ரீதியான அறிவார்ந்த தலைமை இந்த நாடு தோல்வியுற்ற நாடு என்ற நிலையிலிருந்து மறுபிறவி எடுத்திருப்பதை இருப்பதை சமகாலத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறது.

'திறமையான சிறந்த தலைமைத்துவம் ஜனநாயகத்தின் வெற்றிக்கான அளவுகோல்' என்பர். சமகாலத்தில் ரணில் விக்கிரமசிங்க இதனை நிரூபித்திருக்கிறார். தம்மை தேசபக்தர் என்று சொல்லிக்கொள்ளும் எவர் ஒருவரும் இந்த நாட்டை இவ்வளவு சீரழிந்த பொருளாதாரத்திலிருந்தும் சிதைந்துபோன இயல்பு வாழ்க்கையிலிருந்தும் காப்பாற்றியிருக்க முடியாது. முக்கியமாக சர்வதேச சமூகம் ரணில் விக்கிரமசிங்க மீது அதிக மதிப்பையும் நம்பிக்கையையும் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நிதி உதவியின் ஒவ்வொரு அம்சத்திலும் பிரகாசமான அறிவையும் வலுவான நம்பிக்கையையும் அவர்



பெற்றுள்ளார். இந்த நம்பிக்கையின் பிரதிபலிப்பாக அவர் நாட்டைக் கட்டியெழுப்ப விரும்பினார் மற்றும் ஒவ்வொரு இலங்கையருக்கும் இப்போது வாழ்க்கை இருக்கிறது என்ற நம்பிக்கையை ஊட்டினார் என்பதை இவ்வேளையில் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே இந்நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு போன்ற அத்தியாவசிய பணிகளை முடிக்க ஜனநாயக ரீதியான உச்சஅதிகாரங்கள் அவருக்குத் தேவை என்பதை நாம்அறிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் பின்னணியில் அரசியல் சாயல்களுக்கு அப்பால் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வலுவூட்டுவதற்கு, மேலும் ஜனநாயக சக்தியை வழங்குவதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்த வேண்டிய தருணம் இது .

சமகால நிலையில் அரசியல் ஆய்வாளர்கள் முதல் சாமானிய மக்கள் வரைக்கும் எவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என கணிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

கட்சி அரசியலின் அடிப்படையிலான வாக்குகள் மட்டுமே ஊர்ஜிதமாகியுள்ள நிலையில், சாமானிய மக்களின் மிதக்கும் வாக்குகள் இன்னும் சரியான தீர்மானமற்ற நிலையில் முடிவு செய்யப்படாமலே உள்ளன. இந்நிலையில் இன்று தமிழ்பேசும் சிறுபான்மை இனமே ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது.

இம்முறை நாட்டின் மொத்த வாக்குகளில் 70 சதவீதமான பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகள் நான்காக உடைகின்றன. அவற்றில் ரணிலுக்கு 25 சதவீதமும், அநுரவுக்கு 20 சதவீதமும், சஜித்துக்கு 20 சதவீதமும், நாமலுக்கு 5 சதவீதமுமாக உள்ளதாக கணிப்புகள் கூறுகின்றன. மீதி 30 சதவீத வாக்குகளும் தமிழ்முஸ்லிம் மலையக மக்களின் வாக்குகளாகும். இதில் முன்னணியில் உள்ள மூவரில் யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது கீழ் காணும் அம்சங்களில் அடங்கியுள்ளது.

ஒன்று தேர்தல் விஞ்ஞாபனங்கள், இரண்டு எதிர்கால அரசியல் திட்டங்கள், மூன்று சிறுபான்மை மக்களின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான கட்சியின் நிலைப்பாடுகள், நான்கு வெளிநாட்டுடனான உறவுகள், ஐந்து ஊழலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள், ஆறு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், ஏழு கடந்த காலங்களில் இவர்களின் அரசியல் செயற்பாடுகள், எட்டு கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்களாயின் அந்த ஆட்சியில் உள்ள குற்றங்கள் குறைகள் போன்றனவாகும்.

இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கையில் இந்தநாடு பொருளாதார நிலையில் மேன்மை அடைய வேண்டுமாயின் இப்போதுள்ள நிலையை தக்கவைத்துக் கொண்டு எதிர்காலத்துக்கான சிறந்த வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இவற்றை செய்வதற்கு கட்டாயமாக சர்வதேசத்தின் ஆதரவு அவசியமானது. இந்த ஆதரவைப் பெறக்கூடிய வேட்பாளராக யார் இருக்கிறார் என்று பார்த்தோமாயின் இடதுசாரி கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஜே.வி.பி.யின் தலைவர் அநுரவை வலதுசாரி கொள்கைகளை கொண்ட மேற்குலகநாடுகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டா.

அதே போன்று நாட்டில் ஏற்பட்ட தளம்பல் நிலையில்



**சிறிலங்கா சமத்துவ முன்னணியின் செயலாளர் இப்ரான்சா பவ்மி**

உறுதியான நிலைப்பாடுகளை எடுக்கத் தயங்கிய தலைமைத்துவத்தை கொண்ட சஜித்தையும் மேற்குலக நாடுகள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவர்களது நம்பிக்கைக்கு பாத்திரமானவர் ரணில் விக்கிரமசிங்க ஒருவர் என்பதே வெள்ளிடைமலை.

எனவே இம்முறை ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க சிறுபான்மை மக்கள் ஒன்றுபடவேண்டும். இம்முடிவு நாட்டின் எதிர்காலம் கருதி தவிர்க்க முடியாததாகும்.

# உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவருக்கான போட்டிகள்

உலக குடியிருப்பு தினத்தினை(2024) முன்னிட்டு நாடளாவிய ரீதியில் தமிழ், சிங்கள மொழிகளில் கட்டுரை மற்றும் வரைதல் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர் மத்தியில் வரைதல், கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றுமாறு நாட்டின் சகல பாடசாலைகளின் மாணவ, மாணவிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இந்த ஆண்டும் இந்த அழைப்பை விடுத்துள்ளது.




உங்கள் ஆக்கங்களுக்கு அடிப்படையாக கொள்ளக் கூடிய விடயங்களை உள்ளடக்கியதாக வரைதல், கட்டுரை ஆக்கப்பட வேண்டும்.

1. எதிர்கால நகரமொன்று குடியிருப்பு

2. இளைஞர் பலத்தினை திட்டமிட்ட ஒரு நகர நிர்மாணத்திற்கு எவ்வாறு ஈடுபடுத்திக் கொள்ள முடியும்?

3. குடியிருப்பு நிர்மாணத்தில் நவீன தொழில்நுட்பத்தின் பாவனை

4. சுற்றாடல் நலன் சாந்த நகர மக்களின் வாழ்வு

அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் 03, 04. மற்றும் 05ஆம் தரம் மாணவர்கள் முதலாவது பிரிவில் பங்குபற்றலாம்.

இரண்டாவது பிரிவு தரம் 06, 07, 08 மற்றும் 09ஆம் தரம் மாணவர்களாவர்.

மூன்றாவது பிரிவு தரம் 10, 11, 12 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கானதாகும்.

விண்ணபபப்படிவங்களை அருகில் உள்ள தேசிய வீடமைப்பு மாவட்டக் காரியலயலங்களில் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது www.nhda.gov.lk இல் பெற முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி செப்டெம்பர் 06 ஆகும். மேலதிக விபரங்களுக்கு உதவிப் பொதுமுகாமையாளர், தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு, 7ஆம் மாடியிலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம். தொ.பேசி. 0112447038 அல்லது 011 2 447207

வெற்றிபெரும் மாணவ மாணவிகளுக்கு பணப் பரிசில்களும் கேடயம் மற்றும் சான்றிதழ்களும் ஒக்டோபர் 7 ஆம் திகதி கொழும்பில் பிரதமர் தலைமையில் நடைபெறும் தேசிய வைபவத்தில் வைத்து வழங்கப்படும். அத்துடன் சிறந்த வரைபடங்கள் காட்சிப்படுத்தப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப்பொது முகாமையாளர் (தகவல் பிரசாரப் பிரிவு) தெரிவித்தார்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# கல்முனை மாநகர ஆணையாளர் நௌபீஸ் ஜப்பான் பயணம்

கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளரும், கல்முனை மாநகர ஆணையாளருமான என்.எம். நௌபீஸ் விசேட புலமைப்பரிசில் பெற்று ஜப்பான் பயணமானார்.

ஜப்பானில் ஒரு மாத காலம் இடம்பெறவுள்ள உள்ளூர் தொழில்துறை மேம்பாடு குறித்த அறிவுப் பகிர்வு பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

ஜப்பானிய அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்ற இப்பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்கான புலமைப்பரிசில் அனுசரணையை JICA எனும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்காக ஜப்பான் நாட்டு அதிகாரிகளுக்கு மேலதிகமாக 06 நாடுகளில் இருந்து தலா ஒருவர் வீதம் 06 அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளரும் கல்முனை மாநகர ஆணையாளருமான என்.எம். நௌபீஸ் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநகர ஆணையாளரான என்.எம். நௌபீஸ் இத்தகைய உயர்தரமான



வாய்ப்பைப் பெற்று ஜப்பான் செல்வதை முன்னிட்டு கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள் ஆணையாளரை வாழ்த்தி வழியனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**அஸ்லம் எஸ்.மௌலானா...**
ஊடகப் பிரிவு
கல்முனை மாநகர சபை

# உத்தர பிரதேசத்தில் எட்டுப் பேரை கொன்று தின்ற ஓநாய் சிக்கியது!

இந்தியாவின் உத்தர பிரதேசத்தின் பஹராயிச் மாவட்டத்தில், மனிதர்களை, குறிப்பாக குழந்தைகளை வேட்டையாடி வந்த ஓநாய் கூட்டத்தின் மேலும் ஒரு ஓநாய் சிக்கியது. உத்தர பிரதேசத்தின் பஹராயிச் மாவட்டம் மாஷி தாலுகாவில் வனப்பகுதியை ஒட்டிய கிராமங்களில் இரவு நேரத்தில் வீடுகளுக்குள் நுழையும் இந்த ஓநாய்கள், குழந்தைகளை கவ்விச் சென்று, இரையாக உண்பதை வழக்கமாக வைத்துள்ளன.

கடந்த 45 நாட்களில் மட்டும் ஏழு குழந்தைகள் உட்பட எட்டு பேரைக் கொன்றுள்ளன. இந்தக் கூட்டத்தில் ஆறு ஓநாய்கள் இருந்தது தெரியவந்தது.

வனத்துறையினர் தீவிர நடவடிக்கையில், ஏற்கனவே மூன்று ஓநாய்கள் சிக்கின. ஆனால் மூன்று ஓநாய்கள், வனத்துறைக்கு ஆட்டம் காட்டி வந்தன.

இதையடுத்து, 250 வனத்துறை ஊழியர்கள் ட்ரோன்கள் உள்ளிட்டவை வாயிலாக அவற்றை பிடிக்க தீவிர முயற்சி எடுத்து வந்தனர்.

'ஒப்பரேஷன் பேடியா' என்ற பெயரில் இந்த நடவடிக்கை தொடங்கியது. ஹிந்தியில் பேடியா என்றால், தமிழில் ஓநாய் என்று அர்த்தம். வனத்துறையினரின் இந்த நடவடிக்கையை முதல்வர் யோகி ஆதித்யநாத் நேரடியாக கண்காணித்து வந்தார். இந்நிலையில் வனத்துறையினர் வைத்த கூண்டில், மற்றொரு ஓநாய் நேற்றுமுன்தினம் சிக்கியது.அதே நேரத்தில், இரண்டு ஓநாய்கள் தப்பின. இதனால், அந்தப் பகுதியில் உள்ள 35 கிராமங்களைச் சேர்ந்த, 50,000 பேர் பதற்றத்தில் உள்ளனர்.



இது குறித்து வனத்துறையினர் கூறுகையில், 'உடல் வெப்ப நிலையை கணக்கிடும் தேர்மல் ஸ்கானர் உதவியுடன், இந்த ஓநாயைப் பிடித்தோம். விரைவில் மற்ற ஓநாய்களை பிடித்து விடுவோம்' என்றனர். ஓநாயை பிடித்த வனத்துறையினருக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஓநாய்கள் வழக்கமாக மனிதர்களை வேட்டையாடுவதில்லை. அதேநேரத்தில் எப்போதாவது மனிதர்களை வேட்டையாடி சுவைத்துவிட்டால், அதற்கு அவை அடிமையாகி விடுகின்றன.

'அதன்படியே, இந்த ஓநாய்கள், கிராமங்களுக்குள் புகுந்து மனிதர்களைத் தாக்கியுள்ளன. குறிப்பாக, சிறு குழந்தைகள் அவற்றின் இலக்காக இருந்துள்ளன' என அவர்கள் தெரிவித்தனர்.

# அணுஆயுத விஸ்தரிப்பை நிறுத்திய கொர்பச்சேவ்: நேட்டோவின் ஆக்கிரமிப்பு தொடர்வது ஏன்?

பூமியிலிருந்து 2000 ஆம் வருடத்துக்குள் அணு ஆயுதங்களை ஒழித்து விடுவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மிக்கைல் கொர்பச்சேவ் கோரியிருந்தார். அணுஆயுத விஸ்தரிப்பையும், ஆக்கிரமிப்பு இராணுவ ஆதிக்கத்தையும் ரஷ்யா நிறுத்திய போதிலும், நேட்டோவின் ஐரோப்பிய ஆக்கிரமிப்பு இன்னமும் தொடர்வது ஏன் என்பதே பலரின் கேள்வியாகும்.

உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகைல் கொர்பச்சேவ் ஒகஸ்ட் 30, 2022 இல் காலமாகி இரு வருடம் ஓடிவிட்டாலும், அவரைப் பற்றிய பார்வை பலவாறாக உள்ளது. உலக அமைதிக்காக அணு ஆயுதத்தை குறைத்த முன்னோடி என்றும், சோவியத் உடைப்பின் சூத்திரதாரி என்றும் பல்வேறு கோணங்களில் அவர் பார்க்கப்படுகின்றார்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் தலைவரான மிகைல் கொர்பச்சேவ் மேற்குலக நாடுகளுடனான பதற்றத்தைக் குறைத்தவர் என்றும், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போரை 1980களின் இறுதியில் முடிவுக்கு கொண்டு வந்தவர் என்றும் மேற்குலக நாடுகளால் பாராட்டப்பட்டவர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகைல் கொர்பச்சேவ் ஒகஸ்ட் 30, 2022 இல் காலமானார்.

கொர்பச்சேவ் சோவியத்தின் சீர்திருத்தவாதி என்று போற்றப்படுகின்றார். புதிய அணுகுமுறையால் அவர் உலக அரசியல் அரங்கில் 1985 இல் நுழைந்த போது ஆரம்பத்தில் ரஷ்ய மக்களும் பெரும் நம்பிக்கை கொண்டு கோர்பச்சேவை வரவேற்றனர்.

அவரின் சீர்திருத்தங்கள் மீது சோவியத் மக்கள் நம்பிக்கை கொண்டனர். கொர்பச்சேவ் பதவி ஏற்றவுடன் மேற்கத்தேய உலகு பாராட்டியது. அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆதரவளித்தன. இதனாலேயே 1990 இல் அமைதிக்கான நோபல் பரிசு கொர்பச்சேவுக்கு வழங்கப்பட்டது. எனினும், மேற்கத்தேய நாடுகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டதாக ரஷ்யாவில் அவருக்கு எதிராக கண்டனக் கணைகளும் எழுந்தன.

அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ரொனால்ட் ரீகனுடன் நான்கு உச்சி மாநாடுகளில் கலந்து கொண்டார் கொர்பச்சேவ். 1987 இல் நடந்த சந்திப்பின் போது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஒன்றில் இருவரும் கையெழுத்திட்டனர். அதன்படி, ஐரோப்பாவில் வைக்கப்பட்டிருந்த இரு நாடுகளின் ஏவுகணைகள் அகற்றப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980களின் இறுதியில் முடிவுற்றது. அத்துடன் சோவியத் யூனியன் சிதறுண்டு பல நாடுகளாகப் பிரிந்ததும் அந்தக் காலகட்டத்தில்தான்.

சோவியத் வீழ்ச்சி அடையும் காலகட்டத்திலேயே ஆப்கானிஸ்தானில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோவியத் துருப்புகள் 1988ல் திரும்பப் பெறப்பட்டன. அதே போல அங்கோலாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த கியூபாவும், கம்போடியாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த வியட்நாமும் தங்கள் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் கொர்பச்சேவ் வலியுறுத்தினார்.

1989 இல் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்த கொர்பச்சேவ், பனிப்போர் முடிவுக்கு வந்து விட்டதாக அறிவித்தார்.

சோவியத் நாட்டில் சிறந்த பொருளாதாரம் சாத்தியமாவது உலகின் பிற பகுதிகளுடன், குறிப்பாக அமெரிக்காவுடன் சிறந்த உறவுகளைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது என்று கொர்பச்சேவ் நம்பினார். அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், சோவியத் ஒன்றியத்தை அழிப்பதில் மும்முரமாக இருந்தார். மேலும் உலகெங்கிலும் இருந்த அமெரிக்க இராணுவக் கட்டமைப்பை விரிவுபடுத்தினார். இருந்த போதிலும் கொர்பச்சேவ் ஆயுதப் போட்டியிலிருந்து வெளியேறுவதாக உறுதியளித்தார்.

கிழக்கு ஐரோப்பாவின் மாற்றங்கள் சோவியத் யூனியனையும் பாதிக்கத் தொடங்கின. கொர்பச்சேவின் சீர்திருத்த அணுகுமுறையால் சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகளில் சுதந்திரத்திற்கான இயக்கம் தொடங்கியது.

1991 இல் பால்டிக் நாடுகள் (எஸ்டோனியா, லிதுவேனியா மற்றும் லாட்வியா) ஒவ்வொன்றாக, மொஸ்கோவிலிருந்து பிரிந்து தங்கள் சுதந்திரத்தை அறிவித்தன. மொஸ்கோவில் ஒகஸ்ட் 18, 1991 அன்று, சோவியத் இராணுவத்தாலும் அரசாங்கத்திலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கொர்பச்சேவை வீட்டுக் காவலில் வைத்தனர். இதன்பின் கொர்பச்சேவ் தலைமைபதவியை இராஜினாமா செய்வது தவிர்க்க முடியாமல் போனது. 1991 கிறிஸ்மஸ் தினத்தன்று, அவர் தனது பதவியை விட்டு விலகினார்.

அப்போது அவர் ஆற்றிய உரையில், "நாங்கள் இப்போது ஒரு புதிய உலகில் வாழ்கிறோம். பனிப்போர் மற்றும் ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நமது பொருளாதாரம், பொது அணுகுமுறைகள் மற்றும் ஒழுக்கநெறிகளை முடக்கிய நாட்டின் பைத்தியக்காரத்தனமான இராணுவமயமாக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது" என்றார். இதன் பின்னர் வலிமை மிக்க சோவியத் யூனியன் சிதைந்து வீழ்ந்தது.

செர்னேபில் அணு உலை விபத்து ஏற்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு, ஏப்ரல் 1996 இல், கொர்பச்சேவ் கூறுகையில், "ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கான பிள்ளைகள் இறக்கிறார்கள் என்ற காரியத்தை மனிதகுலம் இனி சகித்துக் கொள்ள முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாங்கள் தயாராய் இருக்கவே இல்லை. இந்த அவல நிகழ்ச்சி, மனிதகுலம் கண்டுபிடித்திருக்கும் இராட்சத சக்திகளை இதுவரை கட்டுப்படுத்த முடியவில்லை என்ற உண்மையின் கொடூர நினைப்பூட்டுதலாய் இருக்கிறது" என்றார்.





மே 1990இல் வொஷிங்டன் டி. சியில் நடைபெற்ற வல்லரசு மாநாடு ஒன்றின் போது, சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ், ஐரோப்பிய நாடுகளின் இரண்டு கூட்டணிகளும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தார்.

நடுத்தர குறுகிய தூரம் செல்லும் தரை சார்ந்த ஏவுகணைகளை ஒழிப்பது சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் சோவியத் யூனியன் அதிபர் கொர்பச்சேவ் அமெரிக்க ரீகனும் மொஸ்கோவில் கூடியபோது நிறைவேறியது.

2000 ஆம் வருடத்துக்குள் பூமியிலிருந்து அணு ஆயுதங்களை ஒழித்து விட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கொர்பச்சேவ் சொன்னார். இதற்கான வழி அணு ஆயுதங்களற்ற, வன்முறையில்லா ஓர் உலகமாக முன்னேறிச் செல்வதில் இருக்கிறது என்பதுதான் உண்மை.

உலக அமைதிக்காக அணு ஆயுத குறைக்க முன்னோடியாகஇருந்து, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகைல் கொர்பச்சேவ் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# நலிவுற்ற மக்களின் மேம்பாட்டுக்காக தன்னலமற்று பணியாற்றும் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள்

பெரியபுராணம் பேசும் நாயன்மாருள் பலர் அடியார்களுக்கு அமுதூட்டிப் பெருமை பெற்றோர் ஆவர். அவ்வழியில் இன்றும் அடியவரின் பசிப்பிணி போக்குவதே தனது தலையாய கடன் என்று எம் மண்ணில் வாழும் பெருந்தகை கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் ஆவார். வல்வை மண்ணில் பிறந்த அவர் இன்று 75 ஆவது அகவை காண்கிறார்.

செல்வச்சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடம் 365 நாட்களும் மூன்று வேளையும் உணவு வழங்கப்படுகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டு 65 முதியவர்கள் சந்நிதியானே தஞ்சம் என கோவில் சூழலில் வாழ்கின்றனர். உணவு தவிர காலை, மாலை தேநீர் மற்றும் உடுபுடைவைகளையும் ஆச்சிரமம் இவர்களுக்கு வழங்குகின்றது. கடைசி காலத்திற்கு மோகன் மடம் இருக்கிறது என பேச்சு வழக்கில் கருதுமளவிற்கு ஆச்சிரமத் தொண்டு பரந்து விரிந்திருக்கின்றது.

1985 ஆம் ஆண்டளவில் சந்நிதியான் சூழலில் ஆநந்தா ஆச்சிரமத்தில் தவத்திரு மயில்வாகனம் சுவாமிகளின் அணுக்கத் தொண்டனாக இருந்த செந்திவேல் மோகனதாஸ் என்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அடியவரே பின்னாளில் சந்நிதியான் ஆச்சிரமத்தை நிறுவி இன்று இலங்கை முழுவதிலும் மதங்கடந்து பணி செய்யும் தொண்டராக தன்னை உருவாக்கிக் கொண்டவர்.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை 27.09.1992 இல் தொடங்கப்பட்ட அமைப்பு ஆகும். இது 1993 ஆம் ஆண்டில் இருந்து வெள்ளிக்கிழமை தோறும் வாராந்தம் சைவசமயச் சிறப்பு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது. 1998 தொடக்கம் மாதம் ஒரு முறை 'ஞானச்சுடர்' என்ற பெயரிலான ஆன்மிக சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிடுகின்றது. இதன் இயக்கசக்தியாக கலாநிதி மோகன் சுவாமி விளங்குகின்றார்.

ஆச்சிரமத்திற்குள் அன்னதானம் வழங்குதல், முதியோருக்கு உதவி வழங்கல், மருத்துவ சேவை வழங்கல், கற்றல் உதவி வழங்கல் என்று அமைந்திருந்த சமூகப் பணிகள் 2014 ஒக்டோபர் 29 இல் ஏற்பட்ட மீரியப் பொத்த மண்சரிவுடன் ஒரு திருப்பத்தைக் கண்டது. மலையகத்தில் ஏற்பட்ட இத்துன்பகரமான மண்சரிவின் கோரத்தாண்டவத்தை உணர்ந்து கொண்ட சுவாமிகள் பாரவூர்த்திகளுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவியாக உணவுப் பொருட்களுடன் மீரியப் பொத்தைக்கு நேரடியாகச் சென்று மலையக உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டினார். மலையக மண்ணுக்குத் தொடர்ந்து உதவ வேண்டும் எனவும் திடசங்கற்பம் பூண்டார். இதன்பின் தானே புறப்பட்டு ஆச்சிரமத்திற்கு வெளியே சென்று உதவத் தொடங்கினார்.

பதுளையில் உள்ள உறவுகளுக்கு சத்துணவு, மலையகப் பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கான அடிப்படைத் தேவைகளை வழங்குதல், கெக்கிராவையில் பிள்ளையார் ஆலயத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு உதவுதல் என மலையகம் சார்ந்து அவரது உதவி தொடர்கின்றது. ஆச்சிரம அன்பர் ஒருவரின் உதவியுடன் முல்லைத்தீவில் வீடும் அமைத்துக் கொடுத்துள்ளார். இத்தகைய வீடமைப்புப் பணி இன்னும் விரிவுபெற்று வருகின்றது. மலசலகூடம் அமைத்துக் கொடுத்தல், வறுமையுற்ற திருமணப் பெண்களுக்கு தங்க நகை வழங்குதல், தண்ணீர் வளத்திற்காகக் கிணறு அமைத்துக் கொடுத்தல், வைத்திய சாலைகளுக்கு மருந்துப் பொருள்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மாதாந்தம் உதவிப் பொருள்கள் வழங்குதல், வாழ்வாதார உதவி, கற்றல் உபகரணங்கள், வறிய பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் என அவரது பணிகள் விரிவுபெற்றுச் செல்கின்றன.

வறிய மாணவர்களுக்கான உதவி என்ற வரிசையில் பல்கலைக்கழகத்தில் கற்கும் தமிழ், சிங்கள, இஸ்லாமிய பிள்ளைகள் சமய பேதம் பாராது உதவிகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர்.

தன்னலமின்றி அறப்பணி செய்யும் மோகன் சுவாமி பல்வேறு அமைப்புகளாலும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். அமுதவாரிதி, அறப்பணி அரசு, சமூகச் சுடர் எனப் பலவிருதுகள் அவரை அலங்கரிக்கின்றன. இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்று 2017 இல் கௌரவ டொக்டர் பட்டத்தை வழங்கியது. யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழு 2018 இல் யாழ். விருதை வழங்கிக் கௌரவித்தது.

சமயப் பணி என்பது சமூகப் பணியாகவே முதன்மைப்படுத்தப்படுகின்றது என்பதை நிரூபித்து கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் பணிபுரிகிறார்.

செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்...
முதல்வர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை



இன்று 75 ஆவது பிறந்ததினம்



# சீனா–பிலிப்பைன்ஸ் இடையே வெடித்துள்ள புதிய மோதல்!

சீனாவுக்கும், பிலிப்பைன்ஸுக்கும் இடையே ஏற்கனவே கடல் எல்லை தொடர்பான பிரச்சினை நிலவி வருகிறது. இந்த நிலையில் இரு நாடுகளும் தென்சீனக் கடலில் மற்றொரு இடம் தொடர்பாக மோதிக்கொண்டுள்ளன.

சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இரு நாடுகளுமே கடலில் உள்ள பல்வேறு தீவுகள் மற்றும் பகுதிகளுக்கு உரிமை கோருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக இந்த மோதல் அதிகரித்து வருகிறது. இரு நாட்டுக் கப்பல்களும் மோதிக்கொள்ளுதல், கைகலப்புகள் மற்றும் போர் மிரட்டல் குற்றச்சாட்டுகளும் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இரு நாட்டுக் கப்பல்களும் , சபீனா மணல் திட்டு அருகே மோதிக்கொண்டபோது பிரச்சினை தீவிரமானது. கப்பலை வேண்டுமென்றே மோதியதாக இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றம் சாட்டுகின்றன.

சீனாவால் ஜியான்பின் ஜியாவோ என்றும், பிலிப்பைன்ஸால் எஸ்கோடா ஷோல் என்றும் அழைக்கப்படும் சபீனா மணல் திட்டு, பிலிப்பைன்ஸின் மேற்கு கடற்கரையிலிருந்து 75 கடல் மைல் தொலைவிலும், சீனாவிலிருந்து 630 கடல் மைல் தொலைவிலும் அமைந்துள்ளது.

எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் நிறைந்த பகுதி இது. இரு நாடுகளும் பல ஆண்டுகளாக இந்தப்பகுதிக்கு உரிமை கோரி வருகின்றன.

பிலிப்பைன்ஸ் கப்பல் வேண்டுமென்றே தங்கள் கப்பல்கள் மீது மோதியதாக சீன கடலோர காவல்படை கூறியது. அதே நேரத்தில் சீன கப்பல்கள் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதாக பிலிப்பைன்ஸ் தெரிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது சுற்று மோதல் நடந்தது. அப்போதும் இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக்கொண்டன.

பிரிட்டன், ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் தென்கொரியா உள்ளிட்ட பல நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் சீனாவின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ளன.

திங்களன்று 40 சீனக் கப்பல்கள் தன் இரண்டு படகுகளை இடைமறித்தன என்றும், சில மாதங்களுக்கு முன்பு மணல் திட்டு பகுதியில் நிலைநிறுத்தப்பட்ட பிலிப்பைன்ஸ் கடலோரக் காவல் படையின் கப்பலான தெரேசா மாக்புனாவுக்கு பொருட்களை கொண்டுசென்று சேர்க்கும் மனிதாபிமான பணியை சீனா தடுத்ததாகவும் பிலிபைன்ஸ் கூறியது. சபீனா மணல் திட்டில் நிலத்தை ஆக்ரமிக்க சீனா முயற்சிப்பதாக பிலிப்பைன்ஸ் சந்தேகிக்கிறது.

இந்த மணல் திட்டில் நீண்ட காலத்திற்கு தங்கள் இருப்பை நிலைநாட்டும் திட்டத்தின் ஒரு பகுதியாக பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தெரசா மக்புவானா கப்பலை ஏப்ரலில் சபீனாவுக்கு அனுப்பினார்கள். எண்ணெய் மற்றும் எரிவாயுக்காக ஸ்ப்ராட்லி தீவுகளை ஆராய்வதற்கான தனது முயற்சிகளுக்கு இது முக்கியமானது என்று பிலிப்பைன்ஸ் கருதுகிறது. இதற்கிடையில் தெரசா மக்புவானாவின் இருப்பை, மணல் திட்டை ஆக்கிரமிப்பதற்கான பிலிப்பைன்ஸின் முயற்சியாக சீனா பார்க்கிறது.

சீனர்கள் தங்கள் படகுகளில் ஏறி கைகலப்புகளில் ஈடுபடுவதாகவும், பொருட்களை பறிமுதல் செய்வதாகவும் மற்றும் காற்று நிரப்பக்கூடிய சிறுபடகுகளில் துளைகள் இடுவதாகவும் பிலிப்பைன்ஸ் குற்றம் சாட்டுகிறது.



## ஆழ்கடலில் உள்ள மணல்திட்டுக்கு உரிமை கோரும் போராட்டம்!

சீன கடலோர காவல்படை வீரர்கள் கத்திகள், ஈட்டிகள் மற்றும் வாள்களுடன் தனது இராணுவக் கப்பல் ஒன்றில் ஏறி தன் துருப்புக்களை மிரட்டியதாக பிலிப்பைன்ஸ் சமீபத்தில் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தது.

"நாங்கள் மிகவும் சக்திவாய்ந்த எதிரிக்கு எதிராக போராடுகிறோம்" என்று பிலிப்பைன்ஸ் பாதுகாப்புப்படையின் தலைவர் கில்பர்டோ தியோடோரோ கூறினார்.

அதேநேரத்தில் சீனாவிற்கு எதிராக ஒரு வலுவான எச்சரிக்கையை வெளியிடுமாறு சர்வதேச சமூகத்திடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தனது படைவீரர்கள் பலர் காயமடைந்ததாக பிலிப்பைன்ஸ் கூறுகிறது. சீனாவின் நடவடிக்கைகள் காரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டவருக்கு மரணம் ஏற்பட்டால் அது போர் நடவடிக்கையாக கருதப்படும் என்று அதிபர் ஃபேர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர் எச்சரித்துள்ளார்.





## IMF ஒப்பந்தங்களை மீறினால்...

கொண்டுள்ளது. இந்த திட்டத்தை தொடர்ந்து கிடைக்கும் பயன்களை அதிகரிக்க வேண்டுமா? என்பதை செப்டெம்பர் 21ஆம் திகதி மக்கள் தீர்மானிப்பர்.

இந்த நேரத்தில் இந்நாட்டின் மிக முக்கியமான விடயம் பொருளாதாரம் ஆகும். பல தரப்பினரும் பொருளாதாரம் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்தாலும், அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் இயலுமை பற்றிய புரிதல் இல்லை என்றே தோன்றுகிறது. நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட நாம் இரண்டு வருடங்களில் கடுமையாக உழைத்தோம். இதுவரை நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையின் பலன்கள் முறையாக மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நாடு பொருளாதார ரீதியில் பலமடையும் போது அதன் ஒரு பகுதியை நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த பயன்படுத்த வேண்டும். அடுத்த பகுதியை மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் போது ஏற்பட்ட பாதிப்பை குறைக்க மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி எப்போதும் கூறிவந்தார். நாம் எமது வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை மொத்த தேசிய உற்பத்தியில் 5.2% ஆக வைத்திருக்க வேண்டும். முதன்மை கணக்கின் இருப்பை நேர்மறை 2.3% ஆக பேணுவது எமது திட்டத்தின் முக்கிய இலக்காகும். ஆனால் எதிர்க்கட்சிகளின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டால், முதன்மை கணக்கின் இருப்பு நேர்மறை 2.3% இலிருந்து எதிர்மறை 4.3% ஆக குறையும். அதன் பிறகு சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை செயல்படுத்த முடியாது.

2023ஆம் ஆண்டளவில் 188 பில்லியன் ரூபா நிலுவை தொகையாக இருந்ததுடன், 2024ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 104 பில்லியன் ரூபா அந்த நிலுவை தொகையில் இருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. அதன்படி எங்களது மறுசீரமைப்புத் திட்டம் வரி செலுத்துவோருக்கு சுதந்திரம் அளித்துள்ளதோடு, வரி முகாமைத்துவத்தையும் திறமையாக மாற்றியுள்ளது" என்றார்.

இங்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உரையாற்றிய போது,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை பிரகடனத்துக்கு 'இயலும் ஸ்ரீலங்கா' என்ற பெயரை தெரிவு செய்தமைக்கு விசேட காரணம் உள்ளது. 2022 இல் நம்மால் முடியாது என்று பலர் இந்த நாட்டை பொறுப்பேற்க விரும்பவில்லை. ஆனால் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குழுவினரும் எவராலும் முடியாது என்று கூறிய அனைத்து விடயங்களையும் செய்து முடித்துள்ளனர். அதனால்தான் நமக்கு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்று கூறுகிறோம். சவாலான சூழ்நிலைகளில் பயந்து ஓடுவது முக்கியம் அல்ல. அதை எதிர்கொள்வதே முக்கியம். இந்த காரணங்களுக்காகவே இந்த ஐந்தாண்டு நடவடிக்கைக்கு 'இயலும் ஸ்ரீலங்கா' என்று பெயரிட்டுள்ளோம்.

www.ranil24.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக இந்த விஞ்ஞாபனத்தை பெற்றுக்கொள்ள முடியும். இந்த அறிக்கை ஒரு கற்பனை கதை அல்ல. இதில் உள்ள அனைத்து விடயங்களையும் எவ்வாறு செய்வது என்பது தெளிவாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு முடியாதது எதுவுமில்லை, கடந்த இரண்டு வருடங்களில் நாம் செய்தவற்றின் தொடர்ச்சிதான் இது. நாம் அடைந்த ஸ்திரத்தன்மையை முன்னெடுத்து செல்வதுதான் இது.

## தரமற்ற மருந்துகளென...

(30) நடைபெற்ற மருந்துகள் தொடர்பிலான விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

தற்போதைய சுகாதாரத்துறை தொடர்பாகவும் மருந்துகள் கொள்வனவு தொடர்பாகவும் ஊடகங்களில் பல தவறான மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டு வருவது தொடர்பில் விடயங்களை தெளிவுபடுத்துவதற்காக இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

சுகாதார அமைச்சு மருந்துகளை திடீரென கொள்வனவு செய்வதில்லை. தரத்தில் குறைந்த எந்த மருந்து வகைகளும் கொள்வனவு செய்யப்படுவதில்லை என்று தெரிவித்த அமைச்சர், இலங்கையில் பதிவு செய்யப்படாத மருந்துகள் எந்த சூழ்நிலையிலும் நாட்டுக்குள் கொண்டு வர அனுமதிக்கப்படுவதில்லை. இது தொடர்பாக இரண்டு விடயங்களின் கீழ் பற்றிய விவாதம் நடந்துள்ளது. ஒன்று இலங்கைக்கும் இந்திய அரசுக்கும் இடையேயான ஒப்பந்தம் மூலமும் இந்திய அரசு இலங்கைக்கு விடுத்த கோரிக்கையின்படி இந்திய மக்களுக்கும் அண்டை நாடுகளுக்கும் உயர்தர மருந்துகளை வழங்கும் முறையாகும். 'Janaaushadhi Medicine Movement' என்ற அமைப்பு மூலம் இந்த நடவடிக்கையை இந்தியா முன்னெடுத்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

அந்த அமைப்பில் இலங்கை உள்வாங்கப்பட வேண்டுமென இந்திய அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கமைய அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவோம் என்று நம்பினோம். அமைச்சரவைப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இலங்கைக்கு மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டால், மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகார சபையினால் பதிவு செய்த பின்னரே மருந்துகள் மற்றும் உற்பத்திப்பொருட்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படும்.

இரண்டாவது விடயம் இலங்கையில் கடந்த ஒரு வருடமாக பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வைத்தியர்களால் அடையாளம் காணப்பட்ட சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட 862 மருந்துகள் இலங்கையின் மருந்துகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

"ரமேஷின் மருந்து இறக்குமதியை ஜனாதிபதி இடைநிறுத்தியுள்ளார்" என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது. இதில் எந்தவித அடிப்படை அல்லது அத்தகைய நடவடிக்கையும் இல்லை. அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. மக்களுக்கு தேவையான மருந்துகளை முடிந்தவரை வழங்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்ய இந்தியாவிலிருந்து எந்த நிறுவனமும் தெரிவு செய்யப்படவில்லை. அப்படி ஒரு நிகழ்வு நடந்தால், அது மருந்து ஒழுங்குறுத்தல் அதிகார சபையில் பதிவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். பதிவு செய்யப்படாத மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதில்லை.

இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இரு அரசாங்கங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இலங்கை மருந்துக் கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருக்கின்றேன். நான் அந்த நிறுவனத்தில் வேலை செய்யவில்லை" எனத் தெரிவித்தார்.

## இன்று நாட்டை பொறுப்பேற்க...

தெரிவித்தார். அம்பாந்தோட்டையில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றி பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ராஜித சேனாரத்ன எம்.பி. இதனைக் குறிப்பிட்டார். அவா் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இன்று 39 பேர் முன்வந்துள்ளனர். அவர்கள் பெருமளவு செலவு செய்து பிரசாரம் செய்கின்றனர். 2022 இல் இவர்கள் எவரும் நாட்டின் பொறுப்பை ஏற்க முன்வரவில்லை. அன்று நான் எதிர்க்கட்சி தலைவருடன் இருந்தேன். அவரை அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினோம். அன்று ஹர்ஷ டி சில்வா போன்றவர்கள் அதிகாரத்தில் கை வைத்தால் சுட்டுவிடும் என்று எதிர்க்கட்சி தலைவருக்கு அச்சம் காட்டினர்.மக்கள் வரிசைகளில் நின்றுநின்று உழன்று போயினர். துறைமுகத்துக்கு வந்த கப்பல்கள் திரும்பிச் சென்றன. நாட்டு மக்களுக்கு ஒரு நாள் சாப்பாடு கூட கொடுக்க முடியாமல் இருந்தனர். ஒரு சதம் கூடம் இல்லாத நாட்டைத்தான் ஜனாதிபதி ரணில் விக்கி ர மசிங்கவுக்கு கிடைத்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஏற்றுக்கொண்ட பின்னர் சஜித்துக்கும் பதவி மீது ஆசை வந்தது. மறுமுனையில் அநுரவுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். அநுரவும் ஓடி மறைந்தார். சரத் பொன்சேகாவையும் அழைத்தார். அவரும் நிபந்தனைகளை கூறினார். அன்று ஒருவரும் ஆட்சியை ஏற்க தயாராக இருக்கவில்லை. அப்படியிருந்த நாட்டை பொறுப்பேற்க 38 பேர் வரும் நிலைக்கு இந்த நாட்டை கொண்டு வந்திருப்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## யாழ். சென்னை இடையே...

நாளை முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது நாளை முதல் தினந்தோறும் சென்னையிலிருந்து யாழ். பலாலிக்கு விமான சேவை நடத்தப்படவுள்ளதாக இண்டிகோ (Indigo) ஏயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது யாழ். பலாலிக்கு தினசரி விமான சேவையை இந்தியாவின் அலையன்ஸ் ஏயார் விமானம் (Alliance Air) நடத்துகிறது. இதேவேளை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை சர்வதேச தரத்துக்கு விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது இவ்வாறிருக்க நாகபட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் படகு சேவை அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வைத்தியர் பரிந்துரையின்றி...

நிலை மேலும் மேசமான நிலைக்குள்ளாகும் வாய்ப்புள்ளதாகவும் வைத்தியர் குறிப்பிட்டார். சில பெற்றோர் காய்ச்சல் கண்டறிந்தால் பரசிட்டமோலை அதிகளவில் கொடுக்கின்றனர். இவர்களுக்கு மருத்துவ ஆலோசனைப்படி திட்டமிடப்பட்ட அளவு மருந்தையே வழங்க அறிவுறுத்துவதாகவும் அவர் கூறுகிறார். குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் குழந்தைக்கு பரசிட்டமோல் மருந்து கொடுக்க வேண்டுமா? என்றும், மேலும் குழந்தைக்கு கூடுதல் டோஸ் பரசிட்டமோல் கொடுக்க வேண்டுமா ? என்றும் மருந்துவரிடம் ஆலோசனை பெறவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இது தொடர்பாக ஏதேனும் மேலதிக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள 0112 686 143 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்த முடியுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கொழும்பு பாதுகாப்பு...

Colombo Security Conclave தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்திலான 6ஆவது மாநாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் Colombo Security Conclave செயலகத்தை ஸ்தாபிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சாசனமும் இந்தியா, மாலைதீவு, மொரீஷியஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளால் நேற்று 30ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதில் Colombo Security Conclave இன் முக்கிய வகிபாகத்தை மேலும் வலுவாக்குவதில் ஸ்தாபக ஆவணங்களின் முக்கியத்துவம் தொடர்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சுட்டிக்காட்டினார். அத்துடன் ஒத்துழைப்பின் பல்வேறு காரணிகள் முழுவதிலும் ஸ்திரமான ஈடுபாட்டை உறுதிப்படுத்துவதில் Colombo Security Conclave இன் வகிபாகத்தை இங்கு சுட்டிக்காட்டிய அவர், இந்துசமுத்திர பிராந்தியத்தில் பாரம்பரிய, பாரம்பரியமல்லாத மற்றும் வளரும் கலப்பு சவால்களை முறியடிப்பதில் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவம் தொடர்பாகவும் வலியுறுத்தினார்.

கொழும்புக்கான அவரது விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சந்தித்தார்.

அத்துடன் இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் மாலைதீவு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இப்ராஹிம் லதீப் உள்ளிட்ட Colombo Security Conclave அங்கத்துவ நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார். அது மட்டுமல்லாமல் அவர் கொழும்புக்கான விஜயத்தை மேற்கொண்ட காலப்பகுதியில் எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்கா, ஏனைய அரசியல் தலைவர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பிராந்தியங்கள் உள்ளிட்ட பகுதிகளின் பல்வேறு அரசியல் கட்சிகளினது பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினரையும் அவர் சந்தித்தார்.

## ஜனாதிபதி தேர்தல் கடமை...

குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த பதாகைகள் மற்றும் கட்டவுட்களை நீக்குவதற்காக 1,500 தொழிலாளர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியில் இடம்பெறும் சட்டவிரோத தேர்தல் பிரசார செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறிருக்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மேலும் 118 முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன. இந்நிலையில் கடந்த ஜுலை 31ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 28ஆம் திகதிவரை பெறப்பட்ட தேர்தல் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,347 ஆக உயர்ந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் 1,285 முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பானதென தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, இதற்கு மேலதிகமாக வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 6 முறைப்பாடுகளும், இதர சம்பவங்கள் தொடர்பில் 56 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## தேர்தல் விஞ்ஞாபனத்தை...

நேற்று முன்தினம் (29) மாலை நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"புத்தபெருமானினதும் மகாநாயக்க தேரர்களினதும் ஆசீர்வாதத்துடன் சமூகமயமான தலைமைத்துவத்துடன் அனைவரையும் வெற்றி பெற செய்கின்ற திட்டங்கள் உள்ளடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தையே நாம் வெளியிட்டிருக்கின்றோம். நிபுணர்கள், தொழில் வல்லுநர்கள், கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், கீழ் மட்டத்திலுள்ளவர்களின் சிந்தனைகள் மற்றும் ஆலோசனைகளை பெற்று இந்த தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டில் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம்வரை காணப்படுகின்ற இலஞ்சம், ஊழல், திருட்டு என்பவற்றை ஒழித்து மக்களை பாதுகாக்கின்ற யுகத்தை எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி உருவாக்குவோமென தலதா மாளிகை முன்னிலையில் உறுதிமொழி அளித்திருக்கின்றோம். நம்மிடம் ஜனரஞ்சகமான தத்துவமும் திறமையான சிறந்த குழுவும் இருக்கின்றது. விவசாயிகள், மீனவர்கள், பெண்கள், இளைஞர்கள், சிறியோர், முதியோர் உள்ளிட்ட அனைவரையும் ஒன்று சேர்த்து அவர்களை பலப்படுத்தும் நோக்கில் இந்த விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற உடனே இந்த மண்ணுக்கான நிதர்சனத்தை உண்மைப்படுத்தப்படும்" எனத் தெரிவித்தார்.

## தனி நபரொருவரின் சுயநலத்துக்காக...

கட்சிகள் ஒன்றாகவே பயணித்து வருகின்றன. சில வேளைகளில் கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகள் நிலவினாலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் அனைவரும் ஓரணியாக செயற்பட்டு வருகிறோம். தற்போது ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதுடன், தமிழரசுக் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தமிழர் தரப்பு பொது வேட்பாளருக்கான ஆதரவை இது வரையும் வழங்கவில்லை. அவர்கள் முதலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதென பேசப்பட்ட போதும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பவர்கள் போல் கருத்துகளை பகிந்து வருகின்றனர். தற்போது தமிழரசுக் கட்சிக்குள் உட்கட்சி பூசல்கள் இடம்பெற்று வருவதால், தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்த ஒருவர் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள நபரே, என்னையும் தமிழரசுக் கட்சியையும் பிரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டவர்.

ஆகவே அரசியலில் எதுவும் நடக்கலாம், பொறுத்திருந்து பார்ப்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்...

எனவும் கூறினார். சட்டம், நடைமுறை, நிதி, ஊடகம் ஆகியவற்றை கண்காணிப்பதற்கான 10 நிபுணர்களை கொண்டவர்கள் தமது குழுவில் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்த அவர், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்களின் செயல்பாடு , பாதுகாப்பு உள்ளிட்டவற்றிலும் குழு கவனம் செலுத்துமென்றார். இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் தலா இரண்டு பேர் வீதம் கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் நகரங்களில் மட்டுமின்றி, சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களிலும் வாக்காளர், தேர்தல் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகத்தை இவர்கள் சந்திப்பார்களென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிராம இளைஞர்...

இங்கு மேலும் தெரிவித்த அவர், "கொழும்பு துறைமுக நகரத்தில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளை கிராம இளைஞர்களுக்கு வழங்கும் திட்டம் உருவாக்கப்படும். ஏனைய கட்சிகள் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை பார்த்தால் ஒரே கொள்கைகளை கொண்டுள்ளன. ஒருவேளை ஒருவரே கொள்கைகளை தயாரித்திருப்பார் போல் தெரிகிறது. அனைவரும் ஒரே விடயங்களை பற்றி பேசிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் என்ன வேலைத்திட்டம் என்பது குறித்து எவரும் கூறவில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்கள்

### (31.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். நினைத்தது நிறைவேறவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.



**ரிஷபம் :**
ஒரு கடனை அடைக்க மற்றும் ஒரு கடன் வாங்கும் சூழல் உருவாகும். அடிக்கடி ஏற்படும் ஆரோக்கிய குறைபாடு இன புரியாத கவலையை அளிக்கும்.



**மிதுனம்:**
கடமையை சரிவர செய்ய இயலாது. தாழ்வு மனப்பான்மையால் நொறுங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் அடிக்கடி மோதல் போக்கு காணப்படும்.



**கடகம்:**
வெளிநாடு சென்று பணிபுரிய நினைப்பவர்களுக்கு அதிலிருந்த தடை அகலும். தாயின் உடல்நலம் சீராகும்.



**சிம்மம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவரலாமா என்று சிந்திப்பீர். ஒரு சிலர் விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடும்.



**கன்னி:**
குடும்பத்தில் மூன்றாம் நபரால் குழப்பங்கள் ஏற்படும். எனவே கவனம் தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு குறையும்.



**துலாம்:**
பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும்.



**விருச்சிகம்:**
வாடகை கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.



**தனுசு:**
ஆடை ஆவணச் சேர்க்கை உண்டு. பழைய நகைகளை கொடுத்துவிட்டு புதிய நகைகளை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.



**மகரம்:**
உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. சகபணியாளர்களின் அனுசரிப்பு குறைக்கலாம்.



**கும்பம்:**
உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுப்படியும் அதனால் மனக்கலக்கமும் ஏற்படும். உங்கள் முன்னேற்றத்தை பற்றிய சகப்பனியாளர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.



**மீனம்:**
வருமானம் உயரும். வளர்ச்சிக்கு தடையாக இருந்தவர்கள் விலகுவர். இட மாற்றம்,ஊர் மாற்றம் இனிமை தரும் விதமா அமையும்.

## தேர்தல் விஞ்ஞாபனம்... (03ஆம் பக்கத் தொடர்)

ஒரு போராளியின் இதயத் துடிப்பை அறியும் அரசியல் சக்தியாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவினால்உருவாக்கப்பட்டஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, நாட்டின் அபிவிருத்தி மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் மற்றும் அதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை தனது விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளது. தற்போதுள்ள சவால்களுக்கு எதிராக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் அந்த திட்டங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுமென பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி போன்ற... (03ஆம் பக்கத் தொடர்)

இவ்விடயம் தொடா்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரகலய இருந்த காலத்தில் ஆளும் கட்சியினர் செத்துப் பிழைக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது. இன்று பங்களாதேஷில் காணும் காட்சிகளை அன்று இலங்கையில் பார்த்தோம். பாராளுமன்றத்திற்கு தீ வைக்க முயற்சித்தனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு இடமளிக்கவில்லை. அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது துணிச்சலை காண்பித்தார்.

அப்போது சபாநாயகர், கட்சி தலைவர்களை அழைத்து பேசிய போது அதற்கு செல்லக்கூட எனது குடும்பத்தினர் அனுமதிக்கவில்லை. எம்மீது தாக்குதல் நடத்தப்படுமென அஞ்சினர். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவை எமது கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதி பதவியில் அமர்த்த ஆதரவளித்தோம்.

அதனால் இரு வருடங்களுடன் அவருடைய பாதுகாப்பின் கீழ் மக்கள் சுமுகமாக வாழக்கூடிய நாட்டை கட்டியெழுப்பினோம்" எனத் தெரிவித்தார்.

## அநுரகுமார திஸாநாயக்கவை... (03ஆம் பக்கத் தொடர்)

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் தகவல்களை மறைத்து அரச சொத்துகளை தவறாக பயன்படுத்துவதாக குற்றம் சுமத்தி இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி அநுரகுமார திஸாநாயக்கவை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி அந்த அமைப்பின் சார்பில் தர்ஷன தந்திரிகே உள்ளிட்டோரால் இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அநுரகுமார திஸாநாயக்க, அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வதாக அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் லால்காந்த ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் பிரகாரம் அநுரகுமார திஸாநாயக்கவை பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் கைது செய்யுமாறு சிவில் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

## ஜனநாயகத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

கேட்கவில்லை. கரிம உர வேலைத்திட்டத்தை டாக்டர் பதெனிய கொண்டு வந்தார். சிலரது பேச்சை கேட்டு வரி குறைப்பு செய்தார். இரண்டரை ஆண்டுகளுக்கு பிறகு என்ன நடந்தது? எரிபொருள், மின்சாரம், எரிவாயு, உரம் இல்லாமல் போனது. வரிசை யுகம் உருவானது. மக்கள் வரிசையில் நின்று கஷ்டப்பட்டனர். உற்பத்தி வீழ்ச்சியடைந்து பல பிரச்சினைகளை எதிர்கொண்டதையடுத்து மக்கள் அதனைத் தாங்க முடியாமல் வீதிக்கு வந்தனர். இரண்டு வருடங்களுக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மாற்றி வீதியில் எங்களை மரியாதையுடன் நடக்க வழிவகை செய்தார்" எனத் தெரிவித்தார்.

## 10,000 கோடீஸ்வரர்களிடம்... (03ஆம் பக்கத் தொடர்)

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றி மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாக தெரிவித்த அவர், ஏனைய பிரதான வேட்பாளர்கள் போன்று பொய் வாக்குறுதிகளை நாம் மக்களுக்கு வழங்கி ஏமாற்றப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். 18 சர்வதேச நாடுகள், சர்வதேச நாணய நிதியம் உட்பட 3 பாரிய அமைப்புகள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன. என்னிடம் முறையான வேலைத்திட்டம் உள்ளது. அதனை நடைமுறைப்படுத்தி அடுத்த வருடத்தில் வரிச்சலுகையை வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ள போது பாடசாலையில் நவீன வகுப்புகளை உருவாக்குவதற்காக சர்வதேச ரீதியில் பத்தாயிரம் கோடீஸ்வரர்களிடமிருந்து நிதியை பெற்றுக்கொள்ளப் போவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மேடைகளில் தெரிவித்து வருகின்றார்.

அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள கோடீஸ்வரர்கள் இலங்கையில் வெலிமடையில் உள்ள பாடசாலையின் நவீன வகுப்பறையை உருவாக்க நிதி வழங்க வருவார்களா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## ஜனாதிபதி தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு

# கிழக்கு மாகாணத்தில் மட்டும் 54,858 பேர் தகுதி

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு செப்டெம்பர் 04ஆம், 05ஆம், 06ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், கிழக்கு மாகாணத்தில் மட்டும் மொத்தம் 54,858 பேர் தபால் மூல வாக்களிப்புக்கு தகுதிபெற்றுள்ளனர்.

அதன்படி, அம்பாறை மாவட்டத்தில் 26,778 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 14,964 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 13,116 பேரும் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் மொத்தம் 712,319 தபால் வாக்கு விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளை மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் மேற்கொண்டுள்ளன. அதன்படி, செப்டெம்பர் 04 ஆம் திகதி மாவட்டச் செயலகங்கள், தேர்தல்கள் அலுவலகங்கள், பொலிஸ் ஆகிய நிறுவனங்களுக்கான வாக்களிப்பு பணிகள் இடம்பெறும். தொடர்ந்து 5ஆம், 6ஆம் திகதிகளில் அரச நிறுவனங்கள் மற்றும் படைகளுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும்.

குறித்த திகதிகளில் வாக்களிக்க முடியாதவர்கள் செப்டெம்பர் 11ஆம், 12 ஆம் திகதிகளில் தமது மாவட்டத்தின், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களினூடாக தபால் மூலம் வாக்களிக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

# கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதி குப்பை மேடுகளாக மாறும் அபாயம்

தம்பலகாமம் குறூப் நிருபர்



திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் கிண்ணியா பிரதான வீதியின் கிண்ணியா, தம்பலகாமம் எல்லையை பிரிக்கும், முள்ளியடி சிவப்பு பாலத்துக்கருகில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதனால் இவ்வீதி குப்பைகளால் மாசடைந்து வருவதாக பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கொட்டப்படும் குப்பையில் பிளாஸ்டிக் மற்றும் உடைந்த கண்ணாடி போத்தல்கள் உள்ளிட்ட ஆபத்தான பொருட்கள் உள்ளதனால் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் ஏற்படலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்

'சிவப்பு பாலம்' சுற்றுச்சூழல் கழிவுகளைக் கொட்டும் பூமி அல்ல எனவும் அதற்கு இடமளிக்கப்படக் கூடாது எனவும் தெரிவிக்கும் பாதசாரிகள் இவ்வீதியூடாக பயணிக்கும் போது துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பொது மக்கள் உட்பட கிண்ணியா பிரதேச சபை மற்றும் தம்பலகாமம் பிரதேச சபை ஆகிய அரச துறையினர் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சொகுசு பஸ் மோதி குடும்பஸ்தர் பலி

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கொழும்பில் இருந்து கல்முனை நோக்கி பயணித்த களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில், துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபரொருவரை, அதிசொகுசு பஸ்ஸொன்று மோதியதில் குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (30) அதிகாலை இடம்பெற்றுள்ளதுடன், சம்பவத்தில் கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 63 வயதுடைய இரத்தினம் அருள்ராசா என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை சந்தித்த ஜனாதிபதி வேட்பாளர் சஜித்



(காரைதீவு குறூப் நிருபர் சகா)

ஜனாதிபதி வேட்பாளரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாச அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை ஆலையடிவேம்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்தின் அழைப்புக்கமைய, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை சந்திப்பதற்காக ஆலயடிவேம்பு பிரதேசத்துக்கு விஜயம் செய்துள்ளார். இதன்போது, திருக்கோவில், கோமாரி, ஆலையடிவேம்பு, வளத்தாப்பட்டி, காரைதீவு, கல்முனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில் வாய்ப்பு மற்றும் இளைஞர்கள் தொடர்பான திட்டங்கள் குறித்து சஜித் பிரேமதாச கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகில் எங்குமில்லாதவாறு

# முஸ்லிம்கள் மார்க்க கடமை, கலாசாரங்களை பேணி வாழும் உரிமை இலங்கையிலுள்ளது

## ஈரானின் இலங்கைக்கான ஆன்மீகத் தலைவர்

கிண்ணியா மத்திய நிருபர் கியாஸ்



இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, வர்த்தக மற்றும் கலாசார உறவுகளை விரிவுபடுத்தும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதானது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பின் அடையாளமாகும் என ஈரான் இஸ்லாமிய குடியரசின் இலங்கைக்கான ஆன்மீகத் தலைவர் இமாம் செய்யது அல் ஹாமினி தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச கிராமிய அபிவிருத்தி தொண்டு நிறுவனத்தின் சிவில் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட, அங்கத்தவர்களுக்கிடையிலான மாதாந்த ஒன்றுகூடல் நேற்று முன்தினம் (29) கிண்ணியா விஷன் மண்டபத்தில் நடைபெற்றது. கிண்ணியா பிரதேச கிராமிய அபிவிருத்தி தொண்டு நிறுவனத்தின் தலைவர் முஹம்மது ராபில் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய, ஈரான் இஸ்லாமிய குடியரசின் இலங்கைக்கான ஆன்மீகத் தலைவர் இமாம் செய்யது அல் ஹாமினி,

இந் நாட்டின், ஜனாதிபதி அமைச்சர்கள் உள்ளிட்ட பல அரச நிறுவன அதிகாரிகள் எம்முடன் தொடர்ச்சியாக நல்லுறவுகளை பேணி வருகின்றமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். உமாஓயா திட்டம், எரிசக்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி, இந்த ஒத்துழைப்பின் காரணமாக ஏற்பட்டவைகளாகும்.

பல்லின சமூகங்கள் வாழும் இந் நாட்டில், சமாதானம், பாதுகாப்பு மற்றும் சுபீட்சத்தை உருவாக்க ஏனைய சமூகங்களுடன் முஸ்லிம்கள் இணைந்து வாழ வேண்டும்.

முஸ்லிம்கள் தங்களுடைய மார்க்க கடமைகளையும் கலாசாரங்களையும் பேணி வாழ்வதற்கு எங்கும் இல்லாத பூரண உரிமை இலங்கை தேசத்தில் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந் நாட்டின் அரசுக்கும் அதன் குடி மக்களுக்கும், ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதியின் நல்லாசியினை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என தெரிவித்தார்.

# மரபுக் கவிதை நூல்கள் வெளியீடு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

சுவிட்சர்லாந்து பாவலர்மணி சரளா விமலராசாவின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா, சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முன் இந்து இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் இன்று (31) இடம்பெறவுள்ளது.

இறைபணிச் செம்மல் த.கைலாயபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொள்வதுடன் முதல் பிரதியினையும் பெறவுள்ளார்.

அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் கோடீஸ்வரன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ ஜெகராசன் மற்றும் பிரதேச செயலாளர் போன்றோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது பாட்டரசர் புகழ் கலிவிருத்தம், பனங்காட்டு அந்தாதி, சிந்து பாடுவோம், விருத்தமாயிரம் மரபுக் கவிதை போன்ற நூல்கள் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்து துறைகளிலும் பெண்களின் திறமைகளை பறைசாற்ற வேண்டும்

## பதில் உபவேந்தர் மஜீட்

அம்பாறை மத்திய தினகரன் நிருபர்



பெண்கள் தமது திறமைகளை அனைத்துத் துறைகளிலும் முன்னிலைப்படுத்தி வருவதாகவும், திறமைகளை அடையாளப்படுத்துவதில் பெண்கள் காட்டிவரும் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது எனவும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ் சங்கம் மற்றும் சமூகவியல் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த புத்தளம் புழுதிவயல் பைஸானா பைரூஸ் எழுதிய 'டுவன்டி ப்ளஸ் 20+' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு, பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் தலைமையில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் உரையாற்றும்போது, மார்க்க விழுமியங்களில் பிசகாது பெண்கள் எத்துறையிலும் முன்னேற முடியும் என தெரிவித்தார்.

தற்போது தென்கிழக்கு பல்கலைகழகத்தில் மட்டுமல்லாது ஏனைய நிறுவனங்களிலும் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வருகின்றது. அதன்படி இலக்கிய துறையில் கலை கலாசார பீட மாணவியான பைஸானா பைரூஸ் 'டுவன்டி ப்ளஸ் 20+' என்ற பெயரின் கவிதை நூல் ஒன்றை எழுதியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகளில் ஏனைய மாணவர்களும் தங்களது தடங்களைப் பதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# தொழிற்பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ் வழங்கி வைப்பு





மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள மாஞ்சோலை, பதுரியா கிராமத்தில் ஆங்கில மொழிக் கற்கை மற்றும் தையல் பயிற்சிகளை நிறைவு செய்த பெண்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (29) பதுரியா கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் சுற்றாடல் அமைச்சர் மற்றும் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவருமான வட மேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் கலந்து கொண்டார்.

வாழைச்சேனை ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஜவாத் டைலர் ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்வுக்கு, ஹாபிஸ் நஸீர் அஹமட் மன்றம் அனுசரணை வழங்கியிருந்தது.

இந்நிகழ்வில், ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் அல்ஹாஜ் தஸ்லீம், ஆளுநர் அல்ஹாஜ் நஸீர் அஹமட், வாழைச்சேனை ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஜவாத் டைலர், ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சல்மான் வஹாப் ஆசிரியர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான றஹீம் ஆசிரியர், காசிம் மௌலானா, சமூக சேவகர் நிஜாம், ஜனநாயக ஐக்கிய முன்னணியின் வாழைச்சேனை பிரதேச ஊடகச் செயலாளர் எஸ்.ஐ.நிப்ராஸ், கட்சியின் கிழக்கு மாகாண இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர் சாஜித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# "வாசிக்கும் மலர்கள்" சிறுவர் நிகழ்வு

(கல்முனை விசேட நிருபர்)



மருதமுனை பொது நூலகத்தில் "வாசிக்கும் மலர்கள்" என்ற தொனிப்பொருளில் நூலகர் ஹரீஷா சமீம் தலைமையில் நேற்று முன்தினம் (29) சிறுவர் நிகழ்வொன்று நடைபெற்றது.

சிறுவர்களின் கல்வி மற்றும் அறிவை விருத்தியடையச்செய்யும் நோக்கில், கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்குட்பட்ட நூலகங்களில் சிறுவர் பகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் விடுத்திருந்த அறிவுறுத்தலுக்கமைவாக உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம்.அஸீமின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நூலகங்களின் செயற்பாட்டினை வினைத்திறன் மிக்கதாக மாற்றும் வகையில், நூலகத்திற்கு வருகைத்தரும் சிறுவர்களை ஒன்றிணைத்து இந்த சிறப்பு நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது, தாம் வாசித்த கதைகள், நகைச்சுவைகள், பாடல்கள் மற்றும் அறிவுசார் தகவல்களை சிறுவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், கலந்து கொண்ட சிறுவர்களுக்கு நூலக உத்தியோகத்தர்கள் அன்பளிப்பு பொதிகளுடன், இனிப்புகளையும் வழங்கி பாராட்டி கௌரவித்தனர். மேலும் MACHO என்ற நிறுவனம் இந் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 'நீதிக்கான பயணம்' தொனிப்பொருளில் மட்டக்களப்பில் சித்திரக் கண்காட்சி







(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிள்ளைகளால் வரையப்பட்ட சித்திர கண்காட்சி "நீதிக்கான பயணம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு நகர், காந்தி பூங்காவில் நேற்று முன்தினம் (29) இடம்பெற்றது.

கடந்த கால யுத்தத்தின்போது காணாமல் போனமற்றும்பாதிக்கப்பட்டகுடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள், அக்காலச் சூழலில் தங்களுடைய மனங்களில் உட்கிடக்கைகளாக பதிந்த பல விடயங்களை சித்திரங்களாக வரைந்து இங்கு காட்சிப்படுத்தியுள்ளனர்.

இக்கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## சட்டவிரோத மணல் கடத்தல்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் மற்றும் மரங்களை கடத்திச் சென்ற 25 டிப்பர் வாகனங்கள் ஒரே நாளில் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலை மற்றும் யாழ்ப்பாணம் மன்னார் நெடுஞ்சாலை வழியாக தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் மணல் மற்றும் மரங்கள் டிப்பர் வாகனங்களில் கடத்திச் செல்லப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தொடர் முறைப்பாடுகளை அடுத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி பொலிஸார் விசேட நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அதன்போது, உரிய அனுமதிப் பத்திரங்கள் இன்றி மணல் கடத்தி வந்த 24 டிப்பர் வாகனங்களும், மரங்களை கடத்தி வந்த ஒரு டிப்பர் வாகனமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் , அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்துள்ள பொலிஸார், அதன் சாரதிகளிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், அவர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் மாம்பழ திருவிழா

**யாழ். விசேட நிருபர்**





வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் மாம்பழ திருவிழா நேற்றையதினம் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து பிள்ளையாரும் முருகப் பெருமானும் வெளிவீதியுலா வந்து சிறப்பாக மாம்பழ திருவிழா நடைபெற்றது.

நாரதர் சிவபெருமானுக்கும், உமா தேவியாருக்கும் ஒரு மாம்பழத்தை கொடுத்தார்.

அதனை யாருக்கு கொடுப்பது என தீர்மானிக்க, முதலில் உலகை சுற்றி வருபவருக்கே இந்த மாம்பழத்தை தருவோம் என சிவபெருமானும் உமாதேவியாரும், பிள்ளையாருக்கும், முருகனுக்கும் கூறினார்கள்.

உடனே முருகப்பெருமான் மயில் மீதேறி உலகை சுற்றி வரச் சென்ற போது, பிள்ளையார் சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து நீங்களே என் உலகம் என கூறி மாம்பழத்தை பெற்றுக்கொண்டார்.

உலகை சுற்றி வந்த முருகனுக்கு மாம்பழம் கிடைக்காததால் தனது நகை, உடை அனைத்தையும் துறந்து பழனி மலையில் போய் அமர்ந்தார். எனும் புராண கதையை மையமாக வைத்தே இந்த திருவிழா இடம்பெற்று வருகின்றது.

நேற்றைய மாம்பழ திருவிழாவின் போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்றைய தினம் முருக பெருமான் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நல்லூர் மஹோற்சவ திருவிழாவின் சப்பர திருவிழா இன்று மாலை நடைபெறவுள்ளதுடன், நாளை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### திருத்த வேலைகள் நிறைவு

## நெடுந்தாரகை படகுச் சேவை அடுத்த மாதம் முதல் ஆரம்பம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

நெடுந்தாரகைப் படகின் திருத்த வேலைகள் நிறைவு கட்டத்தை அடைந்துள்ளதாகவும் விரைவில் பரீட்சார்த்த நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் வடமாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ் . மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நெடுந்தாரகைப் படகின் திருத்த வேலைக்காக சுமார் ரூ.59 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது திருகோணமலை துறைமுகத்தில் திருத்த வேலைகள் முடிவடைந்துள்ளன.

விரைவில் குறித்த படகினை குறிக்காட்டுவான் இறங்கு துறைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் எதிர்வரும் மாதம் இந்நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூடிய தலைவர் சஜித்

### சொந்தப் பணத்திலேயே உதவி செய்கிறார்

**யாழ் . விசேட நிருபர்**

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச, நாட்டு மக்களுடன் மட்டுமே டீல் பேசுகிறாரே தவிர அரசியல்வாதிகளுடன் பேசவில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண அமைப்பாளர் உமா சந்திரப்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான அனுமதிகளை கொடுத்தோ, அல்லது தருவதாக வாக்குறுதி வழங்கியோ ஆதரவை பெற வேண்டிய தேவை எமது வேட்பாளருக்கு இல்லை.



எமது ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச எதிர்க் கட்சித் தலைவராக நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பல்வேறு உதவிகளை தனது சொந்த பணத்திலேயே வழங்கி வருகிறார்.

பாடசாலைகளுக்கு பஸ்கள் மற்றும் பாடசாலைகளில் இலத்திரனியல் வகுப்பறைகளை தன்னுடைய சொந்த நிதியிலிருந்து பல கோடி ரூபா செலவழித்து வழங்கி வருகிறார்.

சஜித் பிரேமதாச நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு மக்களுடன் டீல் பேசி வருகிறார்.

ஆகவே நாட்டு மக்கள் தமது எதிர்காலத்தை சிந்தித்து நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கக்கூடிய ஊழல் அற்ற தலைவர் சஜித் பிரேமதாசவை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## புதுக்குடியிருப்பில் வீட்டு ஓடு பிரித்து கொள்ளை

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றின் வீட்டின் கூரையைப் பிரித்து நுளைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த நகை, பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பம் புதுக்குடியிருப்பு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளது.

27.08.2024 அன்று இரவு வீட்டின் கூரையினை பிரித்துக் கொண்டு வீட்டிற்குள் நுளைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த சிறுதொகை பணம் மற்றும் இருபது இலட்சம் ரூபா வங்கியில் வைப்பு செய்யப்பட்ட நிலையான வைப்பு சான்றிதழ்கள், இரண்டு பவுண் எடையுள்ள நெக்ளஸ், மோதிரம் என்பன கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக 29.08.2024 அன்று புதுக்குடியிருப்பு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலீசார் முன்னெடுத்துள்ளார்கள்.

## நல்லை ஆதீனத்துக்கு தருமபுர ஆதீனத்தின் சீர்வரிசை





நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 43ஆவது பீடாரோகணம் திருக்கார்த்திகை தினமான 26ஆம் திகதி திங்கட்கிழமை காலையில் மிக எளிமையாக நடைபெற்றது. வழமையாக நடைபெறுவதுபோல சமாதி கோவிலில் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆதீன முதல்வருக்கு உரிய பீடாரோகண பூஜை நடைபெற்றது.

அதன்பின்னர் தருமபுர ஆதீனத்தின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட சீர்வரிசை சுவாமிகளுக்கு அணிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிவாச்சாரியார்களும், ஆதீனத் தொண்டர்களும் ஹவாய் ஆதீன ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும், வேதாந்த மடத்தின் ஸ்ரீ வேதவித்யாசாகர் சுவாமிகளும், நல்லூர் முருகப் பெருமான் அடியார்களும் கலந்துகொண்டனர்.

## யாழில் வெதுப்பகத்துக்கு சீல்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியிள்ள வெதுப்பகமொன்று நீதிமன்ற உத்தரவில் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் உரிமையாளருக்கு 24 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பகுதியில் உணவு கையாளும் நிலையங்கள் பொது சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் போது வெதுப்பகம் ஒன்று சுகாதார சீர்கேட்டுடன் காணப்பட்டதையடுத்து, உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, வெதுப்பகத்தில் காணப்பட்ட சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் வெதுப்பகத்துக்கு சீல் வைக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கட்டளையிட்ட நீதிமன்றம் வெதுப்பக உரிமையாளருக்கு 24ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

## யாழில் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதிகளான மத்திய பஸ் நிலையம், கோட்டை மற்றும் பண்ணை கடற்கரை பகுதிகளை சூழவுள்ள பகுதிகளில் பொலிஸ் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகள், சமூக சீர்கேடான விடயங்கள் உள்ளிட்ட விரும்பத்தகாத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கமைய புதிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த பகுதிகளில் ரோந்து பணிகளை மேற்கொள்ளுமாறும், இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை கண்டறிந்து அவற்றை முழுமையாக கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு வட. மாகாண ஆளுநர் சார்ள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

## வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளராக டொக்டர் சர்வானந்தன் நியமனம்

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளராக வைத்திய கலாநிதி. தில்லையம்பலம் சர்வானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.



வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் ஓய்வுபெற்று சென்றதையடுத்து அந்த வெற்றிடத்திற்கு, பிரதி மாகாண ஆணையாளராக கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி. தில்லையம்பலம் சர்வானந்தன் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி. எஸ். எம். சாள்ர்ஸினால் வழங்கப்பட்டது.





நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தின் 21ஆம் திருவிழாவான தங்கரத பவனி நேற்றுமுன்தினம் மாலை சிறப்பாக நடைபெற்றது. விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து முருகப்பெருமான், வள்ளிதெய்வாணை சகிதம் உள்வீதியுலா வந்து, தொடர்ந்து தங்கரதத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சி அளித்தார். **(படங்கள்: யாழ். விசேட நிருபர்)**

## சன்னாசி பரந்தன் ஆதிவிநாயகர் ஆலயம் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பம்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

வடக்கில் வவுனியா மாவட்டத்தின் புளியங்குளம் பிரதேசத்தில் சன்னாசி பரந்தன் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை அன்று விநாயகர் சதுர்த்தியுடன் 108 சங்காபிஷேகம் பால்குட பவனி என்பன இடம்பெற்று 08.09.2024 தீர்த்த உற்சவத்துடன் திருவிழாக்கள் நிறைவடையவுள்ளன.

நேற்றைய நாளில் சன்னாசி பரந்தன் ஆதி விநாயகர் வரலாற்று பாடலொன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.



## வவுனியாவில் குடும்ப பெண் கடத்தல்; வாளுடன் நால்வர் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவிலிருந்து குடும்பப் பெண் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கொக்குவெளி, அரசடி வீதியில் வசித்து வந்த குடும்பப் பெண் ஒருவரை யாழ்ப்பாணத்திலிருந்து வான் ஒன்றில் வந்த குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர். வீட்டில் இருந்த பெண்ணின் மாமியார் பெண்ணை தூக்கிச் சென்றவர்களை விரட்டிய போது அவரை உதைந்து விட்டு சென்றுள்ளனர். இதன்பின் மாமியார் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலை குற்றத்தடுப்பு பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கமைய, தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் வாகனம் சென்ற பாதையை பின் தொடர்ந்து சென்ற போது வாகனத்தை பளைப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளதுடன், பெண்ணையும் மீட்டுள்ளனர். இதன்போது கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். மணியந்தோட்டம், இருபாலை, சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் நான்கு பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## சந்தேகநபரின் புகைப்படங்களை வெளியிட்ட பொலிஸார்

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதிகளிலுள்ள வீடுகளில் திருட்டில் ஈடுபடும் சந்தேகநபர் தொடர்பான விபரங்கள் தெரிந்தவர்களை பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர் .

குறித்த சந்தேகநபர் திருட்டில் ஈடுபடுவது தொடர்பிலான காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தென்மராட்சி பகுதிகளில் அண்மைக்காலமாக வீட்டில் உள்ளவர்கள் வெளியில் செல்லும் நேரங்களில் வீடுகளுக்கு புகுந்து திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பகுதியிலுள்ள வீடொன்றில் ஆட்கள் அற்ற நேரம் புகுந்த நபரொருவர் வீட்டிலிருந்த பெருந்தொகை பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை திருடி சென்றுள்ளார்.

குறித்த சம்பவம் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ளது. வீட்டினுள் நுழையும் போது, திருடிய பின்னர் வீட்டிலிருந்து வெளியேறும் போது வேறு ஒரு சேர்ட்டும் அணிந்து திருட்டு சந்தேகநபர் தப்பி சென்றமை பதிவாகியுள்ளது.

குறித்த நபர் தொடர்பான விபரங்கள் அறிந்தவர்கள், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் 0718591337 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மலைச்சாரல்



## அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 111 ஆவது ஜனன தினம்









(பொகவந்தலாவை நிருபர்)

அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 111 ஆவது ஜனன தினம் கொழும்பு பழைய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று (30) அனுஷ்டிக்கப்பட்டது. இதன் போது, இ.தொ.காவின் பிரதிநிதிகள் அவரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, இ.தொ.காவின் தலைமையகமான சௌமியபவனின் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன. இந்நிகழ்வில், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர்கள், உப தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் உப்பட இ.தொ.கா முக்கியஸ்தர்கள் என பலர் பங்கேற்றிருந்தனர். அத்துடன், கொட்டகலையிலுள்ள சி.எல்.எப் வளாகம் உட்பட மலையக பகுதிகளிலும் அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் ஜனன தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிள்ளையின் ஆசைக்காக சீஸ் ரோல்களை திருடினேன் ; நீதிமன்றத்தில் அழுத பெண்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கரண்டுபொன பிரதேசத்தில், இரண்டு சீஸ் ரோல்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, அப்பெண் கண்ணீர் வடிய தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தனது குழந்தைகள் சீஸ் உண்பதற்கு ஆசை என கூறியதனால், இரண்டு சீஸ் ரோல்களையும் திருடியதாக அப்பெண் உணர்வுபூர்வமாக நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கரண்டுபொன பிரதேசத்தில் வீடொன்றில் பணிபுரிந்துவரும் இப்பெண் அவ்வீட்டுக்கு பொருட்கள் வாங்குவதற்காக கேகாலை நகரிலுள்ள வியாபார நிலையமொன்றுக்குச் சென்றிருந்தபோது, அங்கு இரண்டு சீஸ் ரோல்களை திருடியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, இப்பெண் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் (29) இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்ட பெண், பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், இரண்டு சீஸ் ரோல்களையும் உரிய வியாபார நிலையத்தில் ஒப்படைக்குமாறும் நீதவான் அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும் குறித்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பெருந்தோட்ட நிறுவனங்களின் பொறுப்பற்றதனத்தால் ஏற்படும் உயிரிழப்புக்களை அனுமதிக்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு



பெருந்தோட்ட நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் பாவனைக்கு உதவாத உழவு இயந்திரங்கள் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருவதாகவும், இதுபோன்றதொரு துயரச் சம்பவம் இவ்வாண்டும் பதிவாகியுள்ளதாக தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் இதுபோன்ற விடயங்களில் அசமந்தப் போக்குடன் நடந்துகொள்ளும் செயற்பாட்டை கைவிடவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிவித்த அவர்,

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்குட்பட்ட பூனாகலை, உடயன பகுதியில் கொழுந்து ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 54 வயதுடைய தொழிலாளியொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது. இதன் சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தோட்ட முகாமைத்துவத்துடனும் பொலிஸாருடனும் தொடர்புகொண்டு உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

தோட்டப் பகுதிகளில் பாவனைக்கு உதவாத இயந்திரங்களை பயன்படுத்துவதால் தொழிலாளர்களின் பாதுகாப்பு தொழில் சட்டம் என்பன கேள்விக்குறியாகியுள்ளது. இதனை இப்படியே விட்டுவிட முடியாது.

வேலைத்தளங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் தோட்ட நிர்வாகத்தையே சாரும்.

எனவே இது தொடர்பில் தோட்டக் கம்பனிகள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## போதைப்பொருள் விவகாரம்; மூன்று பொலிஸார் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

போதைப்பொருள் விற்பனை செய்யப்படும் வீடொன்றில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் கொண்ஸ்டபிள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிப்பன்ன பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பொலிஸ் கொண்ஸ்டபிள்கள் நேற்று (29) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸார் மூவரும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இவர்கள் அவ்விடத்திற்கு சென்ற காரணம் தொடர்பாக வெலிப்பன்ன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பஸ் விபத்து ; ஏழு பேர் காயம்



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

ஹம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று தங்கல்ல பகுதியில் பாலத்தின் தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஏழு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிபிட்டிய தங்காலை வீதியில் கொடிகமுவ பகுதியில் நேற்று (30) அதிகாலை 3.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தினால் காயமடைந்தவர்கள் தங்கல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, விபத்துக்குள்ளானவர்களின் கை, கால்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாணவி பாலியல் துஷ்பிரயோகம் ; அதிபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கதிர்காமம் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய அதே பாடசாலை அதிபர் கடந்த 22 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள பாடசாலை அதிபர் பல மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மாணவிகள் மற்றும் குறித்த சம்பவத்துக்கு உதவி செய்தவர்கள் குறித்து விசாரணைகளை நடத்துமாறு பாதிக்கப்பட்ட மாணவிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கோத்தமீகம கிராமத்தில் உள்ள பெற்றோர்கள் அனைவரும் இணைந்து நேற்று (29) காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரயிலுடன் மோதி வேன் விபத்து



அம்பேபுஸ்ஸ ரயில் நிலையத்துக்கும் யத்தல்கொடரயில்நிலையத்துக்கும் இடையில் உள்ள ரயில் மார்க்கத்தில் வேன் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை (30) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கண்டியிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த வேன் ஒன்றே ரயிலுடன் மோதுண்டு இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான வேனின் முன் பகுதி முற்றிலும் சேதமடைந்துள்ள நிலையில் சாரதி படுகாயமடைந்து வரக்காபொல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது

(ஊவா வெல்லஸ்ஸ விஷேட நிருபர்)

தனமல்வில உடவலவ வீதியின் 18ஆம் கட்டை பகுதியில், நேற்று முன்தினம் (29) பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, கஞ்சா போதைப் பொருள் செடிகளை வளர்த்து வந்த சந்தேகநபரொருவரை கைதுசெய்துள்ளனர்.

இதன்போது 1 ஏக்கர் நிலத்தில், இரண்டரை அடி உயரம் கொண்ட 1910 கஞ்சாசெடிகளை தனமல்வில பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். சம்பவத்தில் சூரியஆரா குமாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன், கஞ்சா செடிகளும் வெட்டி எரிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சப்ரகமுவ மாகாணத்தில் முறையற்ற விதத்தில் குப்பைகளை போடுபவர்களுக்கு எதிராக வழக்கு

(காவத்தை தினகரன் நிருபர்)

சப்ரகமுவ மாகாணத்தில் முறையற்ற விதத்தில் குப்பைகளை போடும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் திண்மக் கழிவுகளை முறையாக அகற்றுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றபோது, இதனை தெரிவித்த அவர்,

கழிவுகளை மக்கும், மக்காத, இரசாயன, இலத்திரனியல் என வகைப்படுத்தி கழிவு முகாமைத்துவத்திற்காக அந்தந்த உள்ளூராட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்குமாறும், முறையற்ற விதத்தில் கழிவுகளை போட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இரத்தினபுரி மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டிய பதினொரு பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாணத்தில் இயங்கும் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களிலும் இந்த நடவடிக்கைகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். அத்துடன், சப்ரகமுவ மாகாணத்தில் டெங்கு, எலிக்காய்ச்சல் உள்ளிட்ட தொற்றுநோய்களை கட்டுப்படுத்தவும், மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவின் திசாநாயக்க மற்றும் இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தீர்மானங்களுக்கு அமைய, சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவும் இந்த விசேட சுற்றாடல் சுத்திகரிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## குளவி தாக்கி 100 மாணவர்கள் வைத்தியசாலையில்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

குளவி கொட்டுக்கு இலக்காகி சுமார் 100 மாணவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று தெனியாய கல்வி வலயத்தின் பர்சி அபே வர்தன மகா வித்தியாலயத்தில் நேற்று (30) இடம்பெற்றுள்ளது.

பாதிப்புக்குள்ளான மாணவர்கள் எம்பிலிப்பிடிய மற்றும் ஊருபொக்க வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

பாடசாலையை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள குளவிக்கூடு கலைந்ததால் இந்நிலைமை ஏற்பட்டதாக பாடசாலை மற்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குளவி கொட்டு தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த சுமார் 40 மாணவர்கள் குணமடைந்து வீடு திரும்பியதாகவும் இவர்களில் கடுமையான தாக்குதலுக்குள்ளான 8 மாணவர்கள் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## சிறுவர் காப்பகத்திலிருந்து மாயமான மூன்று சிறுமிகளும் கண்டுபிடிப்பு

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

மாத்தளை பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் காப்பகத்திலிருந்து காணமல்போயிருந்த மூன்று சிறுமிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவர் காப்பகத்தின் உரிமையாளரால் கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த மூன்று சிறுமிகளையும் கண்டுபிடித்துள்ளனர்.

தரம் 09 இல் கல்வி பயிலும் 14 வயதுடைய இரண்டு சிறுமிகளும் தரம் 11 இல் கல்வி பயிலும் 17 வயதுடைய ஒரு சிறுமி என மூவரே இவ்வாறு காணமல்போயிருந்தனர்.

குறித்த சிறுமிகள் மூவரும் தற்போது கெக்கிராவ பொலிஸாரின் பாதுகாப்பில் இருப்பதுடன் விசாரணைகளின் பின்னர், அவர்கள் சிறுவர் காப்பகத்தில் ஒப்படைக்கப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில், நேற்று (30) வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாணவர் சந்தையின்போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு பொருட்களை கொள்வனவு செய்தபோது...

(படங்கள் தலவாக்கலை குறூப் நிருபர்)

# நகர்வலம்



## சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு செயலமர்வு





(திறப்பனை தினகரன், அநுராதபுரம் மேற்கு தினகரன், கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் அநுராதபுர மாவட்ட ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் வகையில் நேற்றுமுன்தினம் (29) அநுராதபுர மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய மற்றும் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சரோஜனி குசலா வீரவர்தன ஆகியோர் தலைமையில் விழிப்புணர்வு செயலமர்வொன்று நடைபெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வகிபாகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

தற்போதைய சிறுவர்களின் தவறான நடத்தைகள், பராமரிப்பாளர்களின் செயற்பாடுகளினால் ஏற்படுவதாகவும், அவ்வாறான சிறுவர்களின் தவறான நடத்தைக்கு பெரியவர்கள் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் இங்கு தெரிவித்தார்.

பல்வேறு துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான செய்திகளை தெரிவிப்பதில் ஊடகவியலாளர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை மாவட்ட செயலாளர் இதன்போது வலியுறுத்தினார்.

இன்றைய குழந்தைகளை சரியாக வளர்க்காவிட்டால், நாட்டுக்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடும். எனவே ஊடகங்கள் நெறிமுறைகளை பயன்படுத்த வேண்டிய தேவை உள்ளதாக முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவருமான குசலா சரோஜனி வீரவர்தன இங்கு தெரிவித்தார்.

அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் தகவல் பணிப்பாளர் ஷனிகா மலல்கொட, சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பங்கு மற்றும் சிறுவர் துஷ்பிரயோக அறிக்கையின் தற்போதைய நிலை குறித்து விளக்கினார்.

## ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து புத்தளத்தில் காரியாலயம் திறப்பு



(புத்தளம் தினகரன் நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் முகமாக புத்தளம் மஸ்ஜித் வீதியில் புதிய காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

சமூக சேவையாளர் எம்.என்.எம்.நுஸ்கியின் இல்லத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து காரியாலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. காரியாலய திறப்பு விழாவில் அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் மாகாண அமைச்சருமான எம்.எச்.எம். நவவி,

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பிரத்தியேகச் செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேரோட்ட மகோற்சவம்

(காரைதீவு குறூப் நிருபர் சகா)



வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாலயத்தின் பிரதான நிகழ்வான தேரோட்ட நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதியும் 23ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

இந்த மகோற்சவ பெருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள் தலைமையில் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

தலாவ மெதகம பகுதியில் கடந்த 28ஆம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலாவ வராகொட பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். நீர் இறைக்கும் இயந்திரம் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக எல்லை மீறியதனால் சந்தேக நபரான துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளார்.

காயமடைந்தவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபர் அப்பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தலாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



புத்தளம் தமிழ் மொழி மூல முதலாவது முன்பள்ளியான ஐ.எப்.எம். முன்பள்ளி மாணவர்கள் நேற்றுமுன்தினம் காலை புத்தளம் பொது நூலகம் மற்றும் சிறுவர் பூங்காவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டனர். (படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

## மது விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டை பகுதியில் புதிதாக திறக்கப்படவுள்ள மது விற்பனை நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் நேற்றையதினம் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் நகர பகுதியில் ஏற்கனவே மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டை பகுதியிலும் புதிய மது விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இதற்கு எதிர்ப்புகளை தெரிவித்து வந்தனர்.

தற்போது மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டை பகுதியில் புதிய மது விற்பனை நிலையம் திறக்கப்படவுள்ள நிலையில் அதனைச் சுற்றி மக்களின் குடியிருப்புகள் அமைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

காமன்ஸ், இளைஞர் படையணி முகாம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உட்பட மக்களின் செயற்பாடுகள் அதிகரித்த இடமாக குறித்த பகுதி காணப்படுகிறது.

மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டால் அப்பகுதியில் பல்வேறு கலாசார சீர் கேடுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் உடனடியாக குறித்த மது விற்பனை நிலையத்தை அங்கிருந்து அகற்ற மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் அரசாங்க அதிபருக்கு கையளிக்கும் வகையில் மாவட்டச் செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

கெக்கிராவ ஒலுகரந்த பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கெக்கிராவ பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சில காலமாக மூடப்பட்டிருந்த வியாபார நிலையத்திலிருந்தே சடலம் மீட்கப்பட்டது.

சடலம் கண்டுபிடிக்கப்பட்ட போது பல நாட்களுக்கு முன்னர் இவர் இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவர் அப்பகுதியைச் சேர்ந்த கே.யூ. அமில பியதர்க்ஷன என்ற 44 வயதுடைய திருமணமான நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பல நாட்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து காணாமல் போயிருந்த நிலையில் அவர் வசித்து வந்த இடத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தற்கொலையா அல்லது இயற்கை மரணமா அல்லது கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் நீதவான் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தார்.

## கலக்கல் இசை நிகழ்ச்சி கொள்ளுப்பிட்டியில் நாளை






இலங்கை கலைஞர்களின் ஒன்று கூடலில் அக்ஷரா இசைக் கலைஞர்கள் வழங்கும் "கலக்கல் இசை நிகழ்ச்சி (புதிய, பழைய, இடைக்கால பாடல்கள்) நாளை 01ஆம் திகதி ஞாயிறன்று மாலை 7.00 மணிக்கு கொழும்பு 03. கொள்ளுப்பிட்டி சசகவா ஹோட்டலில் நடைபெறுகிறது.

இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு சிரேஷ்ட பத்திரிகையாளரும், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான கலைக்காவலர் தே.செந்தில்வேலவர் தலைமை தாங்குகின்றார்.

பிரதம அதிதியாக இலங்கை பொன்மனச் செம்மல், கலைத் தங்கம், கலாபூஷணம் எம். எஸ் தாஜ்மஹான் கலந்து சிறப்பிக்கிறார்.

கவிஞர் திலகம் பிரேம் ராஜ் முன்னிலை வகிக்கும் இந்நிகழ்வில் சிறப்பதியாக மக்கள் நலன்விரும்பி சம்மேளனத்தின் தவிசாளரும் சமூக சேவையாளுமான அஸீஸ் லக்கான கலந்து சிறப்பிக்கின்றார்.

இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பிரபலங்கள் மற்றும் தொழிலதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும இசை நிகழ்ச்சி இரவு இராப்போசனத்துடன் நடைபெறவிருக்கிறது.

மேலதிக விபரங்களுக்கு பிரைட் வின்சன் 077 256 1210, கவிக்கமல் 0775745172, தவசீலன் 77 569 0112, பாலன் 077 442 3427, பாசில் 076 187 4878 தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



# 3 மில்லியனுக்கும் அதிக அக்ரஹார பயனாளிகளுக்கு சுகாதாரப் பராமரிப்பு



LMD சஞ்சிகையின் பிரகாரம், இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற சுகாதாரப் பராமரிப்பு வர்த்தகநாமமான ஹேமாஸ் மருத்துவமனை, அரச துறை ஊழியர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் பயனாளிகளுக்கு குறைந்த செலவுடன், உயர்தர மற்றும் சௌகரியமான சேவைகளை வழங்கும், இலங்கையிலுள்ள மிக அதிகமாக சர்வதேச அங்கீகாரங்களைப் பெற்றுள்ள ஒரு மருத்துவமனையாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அக்ரஹார, 3 மில்லியனுக்கும் மேற்பட்ட அரச மற்றும் அரசுடன் இணைந்தியங்கும் நிறுவக ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு முழுமையான மருத்துவக் காப்புறுதியை வழங்குகின்றது. நோயாளரை மையமாகக் கொண்ட சுகாதாரப் பராமரிப்பினை, கணிசமான சேமிப்புக்கள் மற்றும் ஏனைய நன்மைகளுடன், ஹேமாஸ் மருத்துவமனையின் பரந்த அடைவு மட்டம் மற்றும் அதிநவீன ஆற்றல்களின் அனுகூலத்தினை தற்போது இந்த பயனாளிகள் பெற்று அனுபவிக்க முடியும்.

குறைந்த கட்டணங்களுடன், பணத்திற்கு உண்மையான மதிப்பை வழங்கி, சுகாதாரப் பராமரிப்புத் துறையில் தனித்துவமான சேவை வழங்குநராக ஹேமாஸ் மருத்துவமனை தன்னை நிலைநிறுத்தியுள்ளது. அந்த வகையில், அக்ரஹார பயனாளிகளின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு தீர்வாக, குறைந்த கட்டணங்களுடன், வடிவமைக்கப்பட்ட விசேட மருத்துவத் திட்டங்களை ஹேமாஸ் மருத்துவமனை அறிமுகப்படுத்தியுள்ளது. சிசேரியன் மற்றும் சாதாரண மகப்பேறு, முழங்கால் மற்றும் இடுப்பு மாற்றுச் சிகிச்சைகள், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள், நரம்பியல் அறுவைச் சிகிச்சை, ஒட்டுமொத்த சிறுநீரக அறுவை சிகிச்சைகள் அடங்கலாக பல்வேறு அத்தியாவசியமான மற்றும் முக்கியமான மருத்துவ சேவைகளை இத்திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன. குறைந்த கட்டணங்களைக் கொண்டுள்ள இத்திட்டங்கள் கட்டுப்படியான வழியில் சிகிச்சைகளை அணுகும் வாய்ப்பினை அக்ரஹார பயனாளிகளுக்கு வழங்குவதுடன், தேசத்திற்காக உழைப்பதில் தமது வாழ்வுகளை அர்ப்பணித்தவர்களுக்கு சௌகரியமான வழியில் மருத்துவ சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதில் ஹேமாஸ் மருத்துவமனையின் உறுதிப்பாட்டையும் மீள உறுதிப்படுத்தியுள்ளது.




# 2024 பாரிஸ் பாராலிம்பிக்கில் இலங்கை அணியின் உத்தியோகபூர்வ ஆடை பங்காளர் MAS Holdings

இலங்கையின் மிகப்பெரிய ஆடை ஏற்றுமதியாளரும், தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடை தொழில்நுட்ப உற்பத்தி நிறுவனமுமான MAS Holdings, 2024 பரிஸ் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை பரா அணியின் உத்தியோகபூர்வ ஆடை பங்காளராக இணைந்து கொண்டுள்ளது.

இதுதொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பும், ஆடை அறிமுக நிகழ்வும் ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி கொழும்பில் மிக விமர்சையாக இடம்பெற்றது.

இதன்படி, இம்முறை பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து இலங்கை பாரா வீர வீராங்கனைகளுக்கும் மரியாதை அணி வகுப்புக்கான ஆடையுடன், தடகளம், நீச்சல் மற்றும் சக்கர நாற்காலி டென்னிஸ் ஆகிய போட்டி நிகழ்ச்சிகளுக்கான விளையாட்டு ஆடைகளை MAS Holdings வழங்கவுள்ளது.



இந்த ஆடைகள் வசதியான மற்றும் சிறந்த செயல்திறனை உறுதி செய்யும் சிறப்பு செயல்பாட்டு அம்சங்களை கொண்டுள்ளது. குறிப்பாக, மரியாதை அணி வகுப்புக்காக வடிவமைக்கப்பட்ட ஆடையில் காற்றோட்டம் மற்றும் சுவாசிக்கும் தன்மையை வழங்கும் தொப்பியுடனான ஜாக்கெட் உள்ளது. இதில் சரி செய்யக்கூடிய கயிறு மற்றும் காந்த ஜிப்பரும் இணைக்கப்பட்டுள்ளது. அதேபோல, பல்வகை பயன்பாட்டிற்கேற்ற முறையில் Track bottoms ஐ shorts ஆக மாற்றிக் கொள்ள முடியும். மேலும் வீரர்களின் வசதிக்காக Polo சட்டையில் நீளமாக விரிவாக்கக்கூடிய இழுப்பான் வளையத்துடன் கூடிய ஜிப்பர் (Zipper) உள்ளது.

இதனிடையே, தனித்துவமான வீரர்களின் உடல் அமைப்புக்கு ஏற்றவாறு தனிப்பயனாக்கப்பட்ட நீச்சல் ஆடைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமின்றி, சக்கர நாற்காலி டென்னிஸ் வீரர்களுக்கான குட்டை கால்சட்டைகள் (shorts) அதிக நெகிழ்வுத்தன்மை கொண்ட துணியால் தயாரிக்கப்பட்டு, தூண்டலிற்கு துலங்கல் அளிக்கக்கூடிய இடுப்புப்பட்டிகள் மற்றும் எளிதில் பயன்படுத்தக்கூடிய பொத்தான்கள் உள்ளிட்ட சிறப்பு அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இது தவிர, 2024 பரிஸ் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்காக தடகள வீரர்களுக்கு வடிவமைக்கப்பட்டுள்ள ஆடைகள், இலங்கையில் காணப்படும் அதிகளவான வனவிலங்குகளின் வடிவங்களால் ஈர்க்கப்பட்டுள்ளது.

# பாடசாலை மாணவர் ஆரோக்கிய வாழ்க்கை முறை செயலமர்வு



ஆரோக்கியமான வாழ்க்கை முறையை தொடர்ச்சியாக பேணுவது என்பது, வாழ்வு முழுவதும் சிறப்பாக வாழவும், நீண்ட ஆயுளையும் பெற்றுக் கொள்வதற்கான மூலகாரணமாக அமையும்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறை என்பது நிறைவானதும், சமநிலையானதுமான வாழ்க்கையை வாழ அடிப்படையாக விளங்குகிறது, இது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் அனைத்து பரிமாணங்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

அந்தவகையில் நாட்டில் அதிகரித்து வரும் நீரிழிவு நோயை எதிர்த்துப் போராடுவதில் கவனம் செலுத்தும் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பான Suwa Diviya, McKinsey Sri Lanka Young Leaders Sri Lanka உடன் இணைந்து ஆரோக்கியமான வாழ்க்கையைப் பேணுவதன் முக்கியத்துவம் குறித்த விரிவான செயலமர்வு ஒன்றை அண்மையில் நடத்தியிருந்தது.

தொற்றாத நோய்கள் (NCD) தொடர்பான சமூக தாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்பட்ட இந்த செயலமர்வானது 2024 மே மாதம் 28ஆம் திகதி கொழும்பு 10 விவேகானந்தா கல்லூரியிலும், கொழும்பு 03 புனித தோமியர் ஆரம்பக்கல்வி பாடசாலையிலும் வெற்றிகரமாக நடைபெற்றது.

குழந்தைகள் அன்றாடம் பயன்படுத்தும் கற்றல் உபகரணங்களைப் பயன்படுத்தி, ஆரோக்கியமான, சீரான வாழ்க்கையின் அடிப்படைகள் பற்றிய பெறுமதிமிக்க நடைமுறை சார்ந்த அறிவை இந்த செயலமர்வு மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன், சமூகங்களில் நேர்மறையான சிந்தனை மாற்றங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்த செயலமர்வில் மாணவர்களுக்கு சிறுவயதிலிருந்தே ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தைப் உணர்ந்து செயலமர்வும் நடத்தப்பட்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

# இலங்கையர் அதிகம் விரும்பும் மோட்டார் சைக்கிள் நாமம் Honda

இலங்கையில் Honda வர்த்தகநாமத்திற்கான ஒரேயொரு விநியோகஸ்தராக விளங்கும் Stafford Motor Co (Pvt) Ltd. நிறுவனமானது, LMD சஞ்சிகையினால் முன்னெடுக்கப்பட்ட வர்த்தகநாமங்களின் 2024 வருடாந்த தரவரிசை பட்டியலில், வாகனத் துறையில் 'Most Loved Motorbike Brand' (அதிகம் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமம்) எனும் மதிப்புமிக்க பட்டத்தை வென்றுள்ளது என்பதை அறிவிப்பதில் Honda பெருமிதம் கொள்கிறது. சஞ்சிகையின் இந்த தரவரிசை வெளியீடானது, நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களிடையை நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் அடிப்படையில் வர்த்தகநாமங்களை அங்கீகரித்து கௌரவிப்பதோடு, இது ஒரு வெகுமதியுமாகும். இந்த முக்கிய கௌரவமானது, LMD சஞ்சிகையின் வாசகர்களின் வாக்குகளால் தீர்மானிக்கப்படுவதோடு, பல ஆண்டுகளாக Honda மோட்டார்சைக்கிள்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது.



இலங்கையில் மோட்டார் வாகன தொழிற்துறை எதிர்கொண்டுள்ள பெரும் சவால்களுக்கு மத்தியில் அபாரமான மீளெழுச்சி, வலிமை, நீடித்து வளரும் திறனை Honda வெளிப்படுத்தியுள்ளது. இந்த அங்கீகாரமானது. Honda நிறுவனத்தின் சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் அதன் வாடிக்கையாளர்கள் தொடர்பில் நிறுவனம் கொண்டுள்ள ஈடு இணையற்ற அர்ப்பணிப்புக்கு ஒரு உண்மையான சான்றாகும். Honda நிறுவனம் கொண்டுள்ள மதிப்பிற்குரிய இடத்தைப் பேணுவதில் Stafford Motor Co. (Pvt) Ltd. நிறுவனம் உள்ளூர் சந்தையில் முக்கிய பங்காற்றி வருகிறது. மிகவும் சவாலான கடந்த 4 வருடங்களில், நிறுவனம் விற்பனைக்குப் பின்னரான உயர்தர சேவையை தொடர்ச்சியாக வழங்கி வருகிறது. தமது வாடிக்கையாளர்கள் சிறந்த பராமரிப்பு சேவையையும் ஆதரவையும் பெறுவதை நிறுவனம் உறுதிசெய்து வருகிறது.

Stafford Motor Co (Pvt) Ltd. ஆனது, சமீபத்திய சவாலான காலகட்டங்களுக்கு மத்தியில் நாடு முழுவதும் அசல் Honda உதிரிப் பாகங்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், அளப்பரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

# ESG Summit 2024 இல் தங்க விருது பெற்ற Neptune Recyclers



மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு முகாமைத்துவத்தில் நாட்டின் முன்னணி நிறுவனமான Neptune Recyclers நிறுவனம், கொழும்பு பல்கலைக் கழக MBA பழைய மாணவர் சங்கத்தினால் கடந்த 2024 ஓகஸ்ட் 06ஆம் திகதி கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த சுற்றுச்சூழல், சமூக, ஆளுகை (ESG) உச்சிமாநாடு 2024 (ESG Summit 2024) இல் தங்க விருதைப் பெற்றதன் மூலம், ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த மதிப்புமிக்க விருதானது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விருது வழங்கும் விழாவில், Neptune Recyclers சிரேஷ்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களான பிரதம நிறைவேற்று அதிகாரி பஸ்லீன் மஜீத், வணிக மேம்பாட்டு முகாமையாளர் ஆதில் அஸீஸ், மோஷின் முஸ்தாக், வகீல் ஸக்கரியா ஆகியோர் கலந்து கொண்டனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து இந்த விருதைப் பெற்றுக் கொள்ளும் கௌரவம் பஸ்லீன் மஜீத் மற்றும் ஆதில் அஸீஸ் ஆகியோருக்கு கிடைத்தது. நிலைபேறான வளர்ச்சியை நடைமுறைப் படுத்துவதில் நிறுவனத்தின் ஈடு இணையற்ற அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த முக்கிய சாதனையானது, நிறுவனத்தின் மரபணுவின் மையத்தில் உள்ள நிலைபேறான வளர்ச்சியை ஒருங்கிணைப்பதிலான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை கோடிட்டுக் காட்டுகிறது. பல்வேறு துறைகளில் புத்தாக்கம் மற்றும் ஒத்துழைப்பை வளர்க்கும் அதே வேளையில், இலங்கையில் வட்டப் பொருளாதார நடைமுறைகளை மேம்படுத்தும் நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வையுடன் இது ஒன்றிணைகின்றது. மக்களுக்கும் பூமிக்கும் பயனளிக்கும் நிலைபேறான தீர்வுகளைப் பின்பற்ற சமூகங்கள் மற்றும் வணிகங்களை ஊக்குவிப்பதில் Neptune Recyclers கவனம் செலுத்துகின்றது.

# Shakthi CROWN மகுடத்தை சூடிய கண்டியைச் சேர்ந்த பிரணவி



Shakthi CROWN இசை நிகழ்ச்சியின் மாபெரும் இறுதிப்போட்டி இரத்மலானை ஸ்டெய்ன் கலையகத்தில் அண்மையில் நடைபெற்றது.

நாட்டின் முதற்தர இலத்திரனியல் ஊடக நிறுவனமான MTV ஊடக வலையமைப்பு, முதற்தர செய்தி வழங்குநர் நியூஸ்ஃபெஸ்ட், தெற்காசியாவின் பிரமாண்ட கலைக் கேந்திரமான ஸ்டைன் ஸ்டூடியோஸ், இசையுலகின் புரட்சியாய் திகழும் எம். என்டர்டெய்ன்மன்ட் உள்ளிட்ட ஊடகத்துறை ஜாம்பவான்களின் ஒருங்கிணைந்த பலத்துடன் தனித்துவமாய் Shakthi CROWN நிகழ்ச்சி இம்முறை பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட Shakthi CROWN நிகழ்ச்சியில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் குரல் தேர்வில் பங்குபற்றியதோடு, அவர்களுள் தமது திறமைகளை வெளிப்படுத்திய அறுவர் இறுதிப் போட்டிக்கு தெரிவாகினர்.

மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த பி.சிட்சபேஷன், புத்தளத்தைச் சேர்ந்த ஜி.கே, மாத்தளையைச் சேர்ந்த எஸ்.டி. மயூரன், கண்டியைச் சேர்ந்த அட்ஷயா, பருத்தித்துறையைச் சேர்ந்த ஆகாஷ் மதன் மற்றும் கண்டியைச் சேர்ந்த பிரணவி ஆகியோரே Shakthi CROWN மாபெரும் இறுதிப் போட்டியில் மகுடத்திற்காக போட்டியிட்டனர்.

அதற்கமைய, Shakthi CROWN மகுடத்தை கண்டியைச் சேர்ந்த பிரணவி சூடினார்.

போட்டியில் இரண்டாமிடத்தை கண்டியைச் சேர்ந்த அட்ஷயாவும் மூன்றாமிடத்தை மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த பி. சிட்சபேஷனும் பெற்றுக்கொண்டனர்.

# டிஜிட்டல் முறையில் வாடிக்கையாளர்களை உள்வாங்க ஆரம்பித்துள்ள DFCC வங்கி

டிஜிட்டல் வங்கிச்சேவை மற்றும் சேவை வழங்கலில் முன்னோடியான DFCC வங்கி, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 100% இணைய டிஜிட்டல் வழிமுறையில் வாடிக்கையாளர்களை உள்வாங்கும் தளத்தின் வலையமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது. வங்கியின் டிஜிட்டல் பயணத்தில் இது முக்கியமான ஒரு மைல்கல்லாக மாறியுள்ளதுடன், புதிய வாடிக்கையாளர்கள் கைமுறையான அல்லது காகித ஆவண நடைமுறை தேவைப்பாடின்றி, இணைய வழியில் கணக்குகளையும், ஏனைய வசதிகளையும் ஆரம்பிக்கவும், பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு வலுவூட்டுகின்றது. அந்த வகையில், வாடிக்கையாளர்கள் தற்போது ஒப்பற்ற சௌகரியத்தை அனுபவிக்க முடிவதுடன், எங்கேயும், எப்போதும் DFCC வங்கிச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக தம்மை இணைத்துக்கொள்ள முடியும். வங்கிக்கு பிரயாணம் செய்து, வரிசைகளில் காத்திருந்து, காகித ஆவணங்களை பூர்த்தி செய்து அல்லது கணக்குகள் செயல்படுத்தப்படும் வரை காத்திருக்க வேண்டிய தேவை இனியும் கிடையாது. ஒட்டுமொத்த நடைமுறையும் பயனர்நேயமான, தங்குதடையின்றிய மற்றும் மெய்நிகராக உடனடி அனுபவத்தை வழங்கும் வகையில் டிஜிட்டல்மயமாக்கம் செய்யப்பட்டுள்ளதை DFCC வங்கி தற்போது உறுதி செய்கின்றது. வாடிக்கையாளர்கள் தம்மை வங்கியுடன் இணைத்துக்கொள்ளும் போது நேரலை முறையில் முகவரின் ஆதரவும், உதவியும் அவர்களுக்கு கிடைக்கின்றது.

செல்லுபடியான தேசிய அடையாள அட்டை அல்லது இலத்திரனியல் அடையாள அட்டையைக் கொண்டுள்ள, பதின்ம வயதினர் உட்பட, 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தற்போது இச்சேவை கிடைக்கப்பெறுகின்றது. https://applyonline.dfcc.lk/ என்ற தளத்தினூடாக 24 மணி நேரமும் இதனை அணுக முடியும். இணைய வழியில் வாடிக்கையாளரை உள்வாங்கும் செயல்முறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், DFCC wallet, இணைய வங்கிச்சேவை, இலத்திரனியல் வடிவ கணக்குக்கூற்றுக்கள், DFCC Alerts, மற்றும் டெபிட் அட்டைகள் போன்ற பல்வகைப்பட்ட டிஜிட்டல் வங்கிச்சேவை மார்க்கங்கள் அடங்கலாக, நாம் வழங்கும் பல்வேறுபட்ட சேவைகளுக்கான அணுகலை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

# சுற்றுச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பு உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் சன்ஷைன்

இது நிறுவனத்தில் பணிபுரியும் 1,700க்கும் மேற்பட்ட ஊழியர்களின் பாதுகாப்பை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ், அதன் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Environmental, Health and Safety EHS) ஆகிய கொள்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. சன்ஷைன் ஹோல்டிங்ஸின் செயல்பாடுகளில் ஆழமாகப் பதிந்துள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தும் வகையில், அண்மையில் Sunshine Safety Forumஇல் இந்த அறிவிப்பு செய்யப்பட்டது. தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் (National Institute of Occupational Safety and Health NIOSH) பணிப்பாளர் நாயகம் டொக்டர் சம்பிகா அமரசிங்க இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், இந்த நிகழ்விற்கு சன்ஷைன் குழுமத்தின் பிரதம



நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், சன்ஷைன் ஹோல்டிங்ஸின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊழியர்களின் சுகவாழ்வை உறுதிப்படுத்தவும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், பாதுகாப்பு மற்றும் பொறுப்புணர்வு கலாசாரத்தை மேம்படுத்தவும் இன்று நிறுவனங்களுக்கு EHS கொள்கைகள் முக்கியமானவை. மேலும் இது பணியிட விபத்துக்களில் இருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்கவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விபத்து தொடர்பான செலவுகளைக் குறைக்கவும் மற்றும் நிலையான செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் உதவுகிறது.

# Atlas PlayPalz அறிவை வளர்க்கும் விளையாட்டுப் பொருட்கள்

இலங்கையில் கல்வியை மேம்படுத்துவதில் ஓயாத அர்ப்பணிப்பிற்கு பெயர் பெற்று விளங்குகின்ற Atlas Axillia, ஆரம்ப குழந்தைப் பருவ விருத்திக்கு உதவுகின்ற, அறிவை வளர்க்கும் பல்வேறுபட்ட புதிய வகை விளையாட்டுப் பொருட்களை Atlas PlayPalz என்ற வர்த்தகநாமத்தின் கீழ் அறிமுகப்படுத்தி, தனது அர்ப்பணிப்பை மீண்டும் ஒரு தடவை வெளிக்காண்பித்துள்ளது. ஆகஸ்ட் 27 அன்று Trace Expert City இல் இடம்பெற்ற உத்தியோகபூர்வ அறிமுக வைபவத்தில் Atlas Axillia மற்றும் Hemas Holdings ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர்.




'உங்கள் குழந்தையிடமுள்ள அறிவுத்திறனை வெளிக்கொண்டு வாருங்கள்' (Unleash the Genius in Your Child) என்ற உத்வேகமளிக்கும் மகுட வாக்கியத்துடன், Block buddies, Mind buddies மற்றும் Craft buddies ஆகிய மூன்று தனித்துவமான விளையாட்டுப் பொருட்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் ஆரம்பப் பருவ விருத்தித் தேவைகள் மற்றும் பல்வகைப்பட்ட ஆர்வங்களுக்கான தீர்வாக இவை அமைந்துள்ளன. அறிவாற்றல், உணர்வுபூர்வம் மற்றும் சமூக வளர்ச்சி ஆகியவற்றை விருத்தி செய்கின்ற, ஈடுபாடுகளை வளர்க்கின்ற, நேரடி கற்றல் அனுபவங்களுக்கு வழிகோலுகின்ற வகையில் இவை மிகவும் கவனமாகத் திட்டமிட்டு, வடிவமைக்கப்பட்டுள்ளன.

Atlas Axillia நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அசித சமரவீர அவர்கள் நிகழ்வில் உரையாற்றுகையில், “PlayPalz விளையாட்டுப் பொருட்களின் அறிமுகம் Atlas Axillia நிறுவனத்தைப் பொறுத்த வரையில் முக்கியமானதொரு சாதனை இலக்காக மாறியுள்ளது என்று குறிப்பிட்டார்.

# இலங்கை அணி தடுமாற்றம்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸுக்கு பலோ ஒன் செய்யும் நெருக்கடியை எதிர்கொண்டது.



லண்டன், லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (30) முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து அணி 426 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது 74 ஓட்டங்களுடன் இரண்டாவது நாள் துடுப்பெடுத்தாட அரம்பித்த கஸ் அட்கின்சன் சதம் (116) பெற்றார். ஏற்கனவே இங்கிலாந்து அணி சார்பில் ஜோ ரூட் 143 ஓட்டங்களை குவித்தார். இதன்மூலம் 192 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்திருந்த இங்கிலாந்து அணியால் வலுவான ஓட்டங்களை சேகரிக்க முடிந்தது.

இலங்கை சார்பில் அசித்த பெர்னாண்டோ 24 ஓவர்கள் பந்து வீசி 102 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு மிலான் ரத்னாயக்க மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர். 29 ஓவர்கள் பந்துவீசிய சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரியவால் ஒரு விக்கெட்டையே வீழ்த்த முடிந்தது.

இந்நிலையில் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. ஆரம்ப வீரர்களான நிஷான் மதுஷ்க மற்றும் திமுத் கருணாரத்ன தலா 7 ஓட்டங்களுடன் வெளியேறிய நிலையில் இரண்டு ஆண்டுகளின் பின் டெஸ்ட் அணியில் இடம்பெற்ற பத்தும் நிசங்கவால் 12 ஓட்டங்களையே பெற முடிந்தது.

அனுபவ வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ் (22) மற்றும் தினேஷ் சந்திமால் (23) இருவராலும் நின்று பிடித்து அட முடியவில்லை. அணித் தலைவர் தனுஞ்சய டி சில்வா வந்த வேகத்தில் டக் அவுட் ஆகி வெளியேறினார். இதனால் பகல் போசண இடைவேளைக்கு பின்னர் வரை இலங்கை அணி 111 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாற்றம் கண்டது.

## இலங்கை இளையோர்கள் அவுஸ்திரேலியா பயணம்



முக்கோண டி20 தொடர் மற்றும் ஒருநாள் தொடர்களில் பங்கேற்பதற்காக இலங்கை 19 வயதுக்கு உட்பட மகளிர் அணி அவுஸ்ரேலியா சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் அவுஸ்திரேலியா செல்லும் இலங்கை இளையோர் மகளிர் அணி அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து இளையோர் மகளிர் அணிகளுடன் முக்கோணத் தொடரில் ஆடவுள்ளது. செப்டெம்பர் 20 தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் இலங்கை இளையோர்கள் மற்ற இரு அணிகளுடனும் தலா ஒரு முறை மோதவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி அவுஸ்திரேலிய இளையோர் அணியுடன் செப்டெம்பர் 30 ஆம் திகதி ஒருநாள் போட்டி ஒன்றிலும் நியூசிலாந்து இளையோர்களுடன் ஒக்டோபர் 1 ஆம் திகதி ஒரு போட்டியிலும் ஆடவுள்ளது.

## திருமலை இந்து – சிவானந்தா தங்கச் சமர் கிரிக்கெட் இன்று

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான தங்கச் சமர் கிரிக்கெட் போட்டி இன்று (31) திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி கல்விச் சமூகம் 29ஆவது தடவையாக இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. திருகோணமலை இந்து கல்லூரி அதிபர் எஸ். கணேசலிங்கம் தலைமையில் இந்த போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவரை கொன்ற ஆடவருக்கு விச ஊசியால் மரண தண்டனை



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் சுற்றுலா சென்றிருந்த ஆடவர் ஒருவரை கொன்று அவரது சகோதரியை கற்பழித்த குற்றச்சாட்டில் ஆடவர் ஒருவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ரெயின்போர்ட் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் (29) மாலை 57 வயதான லோரன் கோல் என்பவருக்கு விச ஊசி செலுத்தி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக புளோரிடா திருத்தங்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒகாலா தேசிய வனத்தில் தனது சகோதரியுடன் சுற்றுலா சென்றிருந்த புளோரிடா மாநில பல்கலைக்கழகத்தின் 18 வயது மாணவனை 1994 ஆம் ஆண்டு கொலை செய்ததற்காக கோலுக்கு 1995 டிசம்பரில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. கொல்லப்பட்டவரின் மூத்த சகோதரி மீது பாலியல் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் குற்றங்காணப்பட்டார். அந்தப் பெண் மரம் ஒன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில் அவரால் மறுதின தப்பிச் செல்ல முடிந்துள்ளது.

இந்த சம்பவத்தில் கோலின் கூட்டாளியான வில்லியம் போல் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

# சர்வதேச செய்திகள்

## ஹாரிஸ் முதல்முறையாக தொலைக்காட்சிப் பேட்டி

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், கொள்கைகளில் கொண்டுள்ள மாற்றுக் கருத்துகளைத் தற்காத்துப் பேசியுள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பின் முதன்முறை அவர் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்தார். ஜனாதிபதி ஜோ பைடன் பற்றியும் வெள்ளை மாளிகையில் தமது அனுபவத்தையும் ஹாரிஸ் பகிர்ந்துகொண்டார்.

பைடன் நிர்வாகத்தால் கடந்த சில மாதங்களில் சட்ட விரோதக் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது, நோய்ப் பரவல் காலத்துக்குப் பின்னர் பொருளாதாரத்தை மீட்க முடிந்திருக்கிறது, வேலையின்மை வீதம் குறைந்திருக்கிறது என்று ஹாரிஸ் சுட்டிக்காட்டினார்.



வெள்ளை மாளிகையின் கொள்கைகள் வெற்றியைக் கொடுத்திருப்பதாக அவர் கூறினார்.

துணை ஜனாதிபதி வேட்பாளர் டிம் வால்ஸுடன் ஹாரிஸ் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட நேர்காணலில் கலந்துகொண்டார். சுமார் 27 நிமிடம் நீடித்த நேர்காணலில் சுவையாக ஏதும் இல்லை என்று குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் கூறினார்.

## டெலிகிராம் தலைவர் பிணையில் விடுதலை

டெலிகிராம் செயலியின் உரிமையாளர் பாவெல் டூரோவ் 4 நாள் தடுப்புக் காவலில் இருந்த பின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.




அவர் பிரான்ஸை விட்டு வெளியேறக் கூடாது என்பது பிணை நிபந்தனைகளுள் ஒன்றாக உள்ளது.

ரஷ்யாவில் பிறந்த 39 வயது பெரும் செல்வந்தர் டூரோவ், தீர்ப்பு வெளியானதும் அவசரமாகக் காரில் ஏறிச் சென்றுவிட்டார்.

டெலிகிராம் செயலியில் தீவிரவாத, சட்டவிரோதத் தகவல்களை அவர் கட்டுப்படுத்தத் தவறினார் என்பதை ஒட்டிப் பல குற்றச்சாட்டுகளைச் சந்தித்துள்ளார்.

டெலிகிராமில் தற்போது 900 மில்லியனுக்கும் அதிகமானோர் பயன்படுத்துவதாகச் கூறப்படுகிறது. நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறிய ரஷ்யா, வழக்கை அரசியல் அடக்குமுறையாக மாற்ற வேண்டாம் என்று பிரான்ஸுக்கு எச்சரிக்கை விடுத்தது.



# 'போலியோ தடுப்பூசி' வழங்குவதற்காக காசாவில் மனிதாபிமான போர் நிறுத்தம்

## மேற்குக் கரையில் 3 ஆவது நாளாகவும் இஸ்ரேல் படை நடவடிக்கை

காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்காக மானிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு இணங்கியதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. எனினும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் மூன்றாவது நாளாக இஸ்ரேலின் படை நடவடிக்கை நேற்று (30) நீடித்ததோடு காசாவிலும் தாக்குதல்கள் தொடர்ந்தன.

காசா முழுவதும் சுமார் 640,000 குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கையை உலக சுகாதார அமைப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கவிருப்பதாக அந்த அமைப்பின் மூத்த அதிகாரி ரிக் பீபர்கோன் தெரிவித்துள்ளார்.

காசா பகுதியில் மத்திய, தெற்கு மற்றும் வடக்கு என மூன்று கட்டங்களில் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த ஒவ்வொரு கட்டத்தின்போதும் உள்ளூர் நேரப்படி காலை 6.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மோதல்கள் நிறுத்தப்படும்.

காசாவில் கடந்த 25 ஆண்டுகளின் பின்ன முதல் முறையாக போலியோ சம்பவம் ஒன்று பதிவானதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி சுமார் 1.26 மில்லியன் வாய்வழி போலியோ தடுப்பு மருந்துகள் ஏற்கனவே காசாவை சென்றடைந்திருப்பதோடு மேலும் 400,000 மருந்துகள் விரைவில் அங்கு அனுப்பப்படவுள்ளன.

இந்தத் தடுப்பு மருந்துகளை ஐ.நா. அதிகாரிகள் மற்றும் உள்ளூர் மருத்துவ பணியாளர்கள் வழங்கவுள்ளனர். இதற்காக 2,000 இற்கும் அதிகமான சுகாதார மற்றும் சமூக நலன்புரி பணியாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

அப்துல் ரஹ்மான் அபூ அல் ஜித்யா என்ற குழந்தையே காசாவில் போலியோ தொற்றுக்கு உள்ளாகி இருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. இந்தக் குழந்தை நாளை (01) ஒரு வயதை எட்டவுள்ளது.

சிறிய அளவிலேயே குழந்தைக்கு உதவ முடியும் என்று சுகாதார அதிகாரிகள் கூறிய நிலையில் குழந்தையின் தாய் நிவின் அபூ அல் ஜிதையான் அச்சமடைந்துள்ளார். 'போர் மற்றும் எல்லைக்கடவைகள் மூடப்பட்டிருக்கும் நிலையில் எனது மகனுக்கு நோய் தொற்றியதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். போதிய மருத்துவ வசதிகள் இல்லாத நிலையில் இது எனக்கு பேரதிர்ச்சி தந்தது. அவன் இது போன்றே இருந்து விடுவானா?' என்று அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கேள்வி எழுப்பினார்.

'அவன் எனது ஒரே மகன். அவன் சிகிச்சையை பெறுவதும் நடப்பதும் முன்னர் போல் செயற்படுவதும் அவனின் உரிமை. கவனிப்பாரற்று கூடாரத்தில் தங்கி இருப்பது நியாயமற்றது' என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. மனிதாபிமான போர் நிறுத்தத்திற்கு ஆதரவு வழங்குவதாக ஹமாஸ் கூறியது. எனினும் இந்த புதிய நடவடிக்கை ஓர் போர் நிறுத்தமல்ல என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு புதன்கிழமை குறிப்பிட்டிருந்தார்.



'இது போலியோ தடுப்பூசி வழங்குவதற்கான போர் நிறுத்தம் ஒன்றல்ல, ஆனால் காசாவின் குறிப்பிட்ட பகுதிகள் அதற்காக ஒதுக்கப்படுகிறது' என்று நெதன்யாகுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

